
1 — 11-5


கல்கி

பொருளடக்கம்

மலர் 6 இதழ் 41 | 1947 மே 11 | சர்வஜித்து சித்திரை 28

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.


நிர்வாக அலங்கோலம்.


பாலஸ்தீனப் பிரச்னை பற்றி ஐக்கிய தேச மகாசபைக் கூட்டம் நடந்து கொண்டிருக்கையில் கூட யூதர்களின் பயங்கர நடவடிக்கைகளின் உக்ரம் குன்றவில்லை.
ஐக்கிய தேச மகா சபைக் கூட்டம்
உஷ், சத்தம் போடாதீர்கள்
யூதர்கள்

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப்பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 41

என்ன சேதி?

புலி வருகிறது!

மீண்டும் புலி வருகிறது; வந்து கொண்டே யிருக்கிறது, நாலுகால் பாய்ச்சலில் வந்துகொண்டே யிருக்கிறது!

சென்னை மாகாண உணவு நிலைமையைப் பற்றிச் சென்னை சிவில் சப்ளைஸ் கமிஷனர் மிஸ்டர் மாஸ்டர்மான் வெளியிட்டிருக்கும் தகவல் நம்மையெல்லாம் தூக்கி வாரிப் போடுவதாக இருக்கிறது. தூக்கி வாரிப் போடுவதாக இருக்கிறது என்று சொல்லுவதைக் காட்டிலும், தொண்டைக்குள்ளே சென்ற கவள அன்னம் உள்ளேயும் செல்லாமல் வெளியேயும் வராமல் திக்கு முக்காடுகிறது என்றுகூடச் சொல்லலாம்.

மிஸ்டர் மாஸ்டர்மான் வெளியிட்டிருக்கும் தகவலிலே நடுநாயகமா யிருக்கும் விஷயம் இதுதான். மீண்டும் பஞ்சம் வருகிறது, வந்துகொண்டே யிருக்கிறது. ரொம்ப ரொம்ப வேகத்தில் சென்னை மாகாணத்தை நோக்கி வந்து கொண்டே யிருக்கிறது என்பதேயாகும். இதற்குக் காரணம் என்னவென்பதை குண்டூர் சம்பா நெல்லைப்போல அவர் ரொம்ப அழகாகவும் தெளிவாகவும் சொல்லி யிருக்கிறார்.

அரைவயிற்றுக் கஞ்சி குடிப்பதா யிருந்தாலும், இந்த மாகாணத்துக்கு ஏறக் குறைய பதினேழு லட்சம் டன் அரிசி வேண்டும். இந்தப் பதினேழு லட்சம் டன் அரிசியை நெல் உற்பத்தி செய்பவர்களிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டுமென்று சர்க்கார் திட்டம் போட்டிருந்தார்கள். ஆனால், நம்முடைய மாஜி பிரதம மந்திரி பிரகாசம் காருவின் அருமைக் கருமையான உற்பத்தியாளர் — வாங்குவோர் சங்கங்களின் புண்ணியத்தாலும் அதைப் போன்ற வேறு சில காரணங்களாலும் இதுவரை மேற்படி தொகையில் 38 சத விகிதம்தான் கொள்முதலாகி யிருக்கிறது.

விரைவில் அரிசிக் கொள்முதலாக வேண்டும்; இல்லாவிடில் பயங்கரமான பஞ்சத்தை — வங்காளப் பஞ்சத்தைப் போன்ற ஒரு பஞ்சத்தை நாம் எதிர் நோக்க வேண்டியதா யிருக்குமாம்.

வழி உண்டு

மேற்படி பஞ்சத்தைத் தவிர்ப்பதற்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிகள் அதிகமாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லை. இதை ராஜன்பாபு கொஞ்ச காலத்துக்கு முன்பு ரொம்பத் தெளிவாகச் சொல்லி யிருக்கிறார்.

நிலைமை இவ்வளவு மோசமானதாக இருந்த போதிலும் மேற்படி பயங்கரப் பஞ்சப் புலியிடமிருந்து நாம் தப்புவதற்கு மிஸ்டர் மாஸ்டர்மான் ஒரு வழி சொல்லுகிறார். "அரிசி உற்பத்தி செய்பவர்கள் தங்கள் கைவசம் இருக்கும் அதிகப்படி தானியத்தைச் சர்க்காரிடம் கொடுத்தால், நாம் பட்டினி கிடக்கும்படி நேராது" என்கிறார் அவர். விவசாயிகள் இதற்குச் செவிசாய்த்து, பட்டினியிலிருந்து மக்களைக் காப்பாற்றிய புண்ணியத்தை அடைவார்கள் என்று கருதுகிறோம்.


"சுதந்திர வீரன்"

வி. உ. சி. பிறந்த தூத்துக்குடி தேச பக்திக்கும் சுதந்திர ஆர்வத்துக்கும் பெயர் போனதாகும். அதே நகரத்தில் பிறந்த

ஸ்ரீ ஜே.பி. ராடரிக்ஸ் தமிழ் நாட்டின் சிறந்த தேசிய வீரர்களில் ஒருவர். பொதுக் கூட்டங்களில் ஸ்ரீ ராடரிக்ஸ் பேசும்போது தீப் பொறி பறக்கும்; சுதந்திரக் கனல் தகிக்கும். அவருடைய எழுத்திலேயும் அத்தகைய தேசபக்தி ஆவேசமும் சுதந்திர ஆர்வமும் ததும்புவதைக் கண்டு மிகவும் மகிழ்கிறோம். ஸ்ரீ ராடரிக்ஸை நிர்வாக ஆசிரியராகக் கொண்ட "சுதந்திர வீரன்" பத்திரிகை முன்னம் தூத்துக்குடியிலிருந்து வெளி வந்து கொண்டிருந்தது. இப்போது சில காலமாகச் சென்னையிலிருந்து வெளி வருகிறது. "சுதந்திர வீரன்" சென்னைக்கு வந்ததிலிருந்து சென்னை நகரமே ஓரளவு விழிப்படைந்து முது கெலும்பு நிமிர்ந்து எழுந்து நின்று "என்ன சேதி?" என்று கேட்கத் தொடங்கி யிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. கள்ள மார்க்கெட்டுக்குச் "சுதந்திர வீரன்" கொடுக்கிற டோஸை அந்தக் கள்ள மார்க்கெட் மட்டும் படிக்குமானால், அது உடனே தூக்குப் போட்டுக் கொண்டு உயிரை விடும். அரசியலில் அக்கிரமம் செய்கிறவர்கள் யாரையும் "சுதந்திர வீரன்" சும்மா விடுவது கிடையாது. அவர்களுக்குச் 'சவிர் சவிர்' என்று சவுக்கடி கொடுத்துக் கொண்டே யிருப்பான். தேச நிலைமையைப் பற்றிச் சிந்தித்து மனச் சோர்வு அடையும் போது, "சுதந்திர வீரன்" பத்திரிகையைக் கையில் எடுங்கள். மனச் சோர்வு மாயமாய்ப் பறந்து விடும்; புத்துயிரும் புதிய உற்சாகமும் எங்கிருந்தோ வந்துவிடும். இத்தகைய அருமருந்து போன்ற "சுதந்திர வீரன்" பத்திரிகையின் தனிப் பிரதி விலை அணா இரண்டுதான்; வருடச் சந்தா ரூபாய் ஆறுதான். விலாசம்: "சுதந்திர வீரன்" காரியாலயம், நெ. 2/141, பிராட்வே, சென்னை.



ஸ்ரீ ராடரிக்ஸ்



சுவர்க்கப் பிறவிகள்!

தமிழ் நாட்டில் ஆயிரக்கால் மண்டபம் என்று கேள்விப் படாதவர்கள் இருக்க முடியாது.

பலர் அந்த மண்டபங்களை நேரிலும் பார்த்திருப்பார்கள்.

முன்னொரு காலத்தில் ஆயிரம் தூண்களுடன் விளங்கிய மேற்படி அழகிய மண்டபங்கள் இன்று பெரும்பாலும் இடிந்து வெறும் தூண்களாக மட்டுமே காட்சி அளிக்கின்றன.

அவை புராதனச் சிறப்பின் சின்னங்கள்.

அது போலவே, இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மாளிகைக்கும் ஆயிரத்துக்கு மேற்பட்ட தூண்கள் உண்டு.

அவை கல் தூண்களல்ல, கருங்கல் தூண்களும் அல்ல. ''இரும்புத் தூண்கள்'' என்று பிரசித்தி பெற்றவை.

அந்தத் தூண்கள் எவ்வளவு காலமாயினும் துருப் பிடிக்காதவை, யாராலும் அசைக்க முடியாதவை என்றெல்லாம் கருதப்பட்டு வந்தன.

ஆனால், இரக்கமற்ற அந்தப் பாழும் காலச் சக்கரத்திலிருந்து யார் தப்ப முடியும்?

இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மாளிகையைத் தகர்த்த காலச் சக்கரமானது, மேற்படி இரும்புத் தூண்களையும் அசைக்க ஆரம்பித்து விட்டது.

அந்தத் தூண்களும் ஆட ஆரம்பித்து விட்டன!

மேற்படி தூண்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொடுமையின் சின்னங்கள்.

* * *

இந்தியாவில் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் உயிர்நாடி ஐ. ஸி. எஸ்., ஐ. பி. எஸ். போன்ற கோஷ்டியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களே.

அவர்களை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைத் தாங்கும் ''இரும்புத் தூண்கள்'' என்று கூறுவது வெகு காலமாக வழக்கத்தில் இருந்து வருகிறது.

அவர்கள் லண்டனிலுள்ள இந்திய மந்திரியால் நேரடியாக நியமிக்கப்படும் விசேஷ கௌரவம் படைத்தவர்கள். எனவே, லண்டன் தேவதையிடமிருந்து நேரடியாக வரம் பெற்று வந்துள்ள அவர்களை மாகாண மந்திரிகளோ, இந்திய சர்க்கார் மந்திரிகளோ அசைக்க முடியாது.

பட்டவர்த்தனமாகச் சொல்லப் போனால், இந்தியாவிலுள்ள மந்திரிகளையும், கவர்னர்களையும், ஏன் வைஸ்ராயையும்கூட ஆட்டி வைப்பவர்கள் ஐ. ஸி. எஸ். காரர்களே என்று கூறுவது மிகையாகாது.

அவர்களுக்குச் சம்பளமும் சலுகைகளும் அதிகமானவை. எனவே, அவர்களை ''சுவர்க்கப் பிறவிகள்'' என்றும் கூறுவதுண்டு.

அவர்கள் இந்தியக் கஜானாவிலிருந்து ஊதியம் பெறுவோராயினும், இந்திய ஜனங்களின் எஜமானர்களேயன்றி ஊழியர்கள் அல்ல.

அதாவது, பிரிட்டிஷாரின் நலனுக்காக இந்தியர்களுக்கு எவ்வித அநீதியும் இழைக்கத் தயங்காத ஒரு திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் மேற்படி கோஷ்டியினர் என்று கூசாமல் கூறிவிடலாம்.

பிரிட்டிஷாரின் ஏகபோக பாத்தியமான கோட்டையாக இருந்து வந்த ஐ. ஸி. எஸ். வர்க்கத்தில், நீண்டகாலக் கிளர்ச்சிக்குப் பின்னர்தான் இந்தியர்களுக்கு இடம் கிடைக்கத் துவங்கியது.

இந்தியாவில் பிரிட்டிஷாரால் இழைக்கப்பட்ட எண்ணிக்கையற்ற அநீதிகள் பலவற்றிற்கும் ஐ. ஸி. எஸ். காரர்களான ஆங்கிலேயர்கள்தான் முக்கிய காரணஸ்தர்களாக இருந்து வந்திருக்கிறார்கள்.

ஆட்சி முறையில் உலகிலேயே ஒரு நாட்டிலும் இராத விசித்திரங்கள் இந்தியாவில்தான் உண்டு.

பொது ஜனங்களின் அபிமானத்தை இழந்தது மன்றி, அவர்களுடைய ஏகோபித்த எதிர்ப்பையும் சம்பாதித்துக் கொள்ளும் அதிகாரி, அவர் பிரதம மந்திரியாயினும் அல்லது பதவி ஏணியின் கீழ்ப்படியில் இருப்பவராயினும், உண்மையான ஜனநாயக அரசாங்கத்தின் கீழ் அதிக காலம் நீடிக்க முடியாது.

ஆனால், இந்தியாவிலோ வெனில், ஓர் அதிகாரி எவ்வளவுக் கெவ்வளவு பொது ஜனங்களிடை செல்வாக்கை இழக்கின்றாரோ, அவ்வளவுக் கவ்வளவு அதிகமாக அவர் பிரிட்டிஷ் சர்க்காரின் கருணை கடாட்சத்துக்குப் பாத்திரராவார்.

ஒருவருக்குப் பொது ஜனங்களின் அபிமானம் 0 என்றால், அவர் பிரிட்டிஷ் சர்க்காரின் 100% அபிமானத்துக்குப் பாத்திரராவது சர்வ நிச்சயம்!

இவ்வாறு பிரிட்டிஷ் சர்க்காரின் செல்லப் பிள்ளைகளான எத்தனையோ இந்தியப் பிரமுகர்களும் இருக்கிறார்கள்.

அத்தகையோருக்கு ஒரு பதவி போனால், அதைக் காட்டிலும் பெரிய மற்றொரு பதவி காத்துக் கொண்டிருக்கும்.

இதை விளக்க எத்தனையோ உதாரணங்கள் கூறலாம்.

கோடிக் கணக்கான ஜனங்களின் பரம அபிமானத்துக்குப் பாத்திரர்களான பாரதத் தவப் புதல்வர்கள் சிறைகளில் உழன்றதையும், பொது ஜன அபிமானம் என்பதைக் கனவிலும் கண்டு அறியாத 'பாக்கியசாலிகள்' பதவி ஏணியின் உச்சியில் பரமானந்தத்துடன் வீற்றிருந்ததையும் காட்டிலும் அதற்கு வேறென்ன உதாரணம் வேண்டும்?

பாத கண்டத்திலுள்ள சகலரும் 'படுகொலைகள் செய்த படுபாவி' என்று வெறுத்த ஓர் அதிகாரிக்கு பிரிட்டிஷார் பவுன் பட்டாக் கத்தி பரிசளித்துப் புகழ்மாலை சூட்டியதைக் காட்டிலும் வேறென்ன உதாரணம் வேண்டும்?

* * *

இந்த ஆங்கில ஐ. ஸி. எஸ். காரர்கள் இருக்கிறார்களே, இவர்கள் பெரிய மேதாவிகளும் கூட.

வேறெவருடைய கண்களுக்கும் புலப்படாத சில இரகசியங்கள் இவர்களுக்கு மாத்திரம் தென்படுவது உண்டு.

எத்தனையோ இந்திய இளம் தேசபக்தர்களின் உதிரத்தை உறிஞ்சிய, எத்தனையோ இந்திய இளைஞர்களைப் பலி கொண்ட அந்தமான் தீவை, 'பூலோக சுவர்க்கம்' என்று வாய் கூசாமல் வர்ணித்தவர் ஓர் ஐ. ஸி. எஸ். காரர்தான்.

அரசியல் வழக்குகளில் எல்லையின்றி அநீதி வழங்கிய 'பெருமை'யும் ஐ. ஸி. எஸ். காரர்களான மாஜிஸ்ட்ரேட்டுகளையே சார்ந்ததாகும்.

* * *

பழைய சம்பவங்களை மறந்து விட்டு, இன்று நடப்பதைத்தான் பாருங்களேன்.

இந்தியாவில் இந்தியர்களின் ஆட்சி ஏற்பட்டு விட்டது. பிரிட்டிஷார் தாங்கள் வெளியேறும் நாளையும் நிச்சயித்து விட்டார்கள்.

ராஜாவைக் காட்டிலும் அதிக ராஜ விசுவாசமுள்ள இந்த ஐ. ஸி. எஸ். காரர்களும், ஐ. பி. எஸ். காரர்களும் இன்னும்கூடத் தங்களுடைய விஷமத்தனத்தை விட்டபாடில்லை.

வைஸ்ராய் வேவலுக்குத் துர்ப்போதனை செய்து, அவரது பதவிக்கே பாக்கு வைத்தவர்கள் இந்த ஐ. ஸி. எஸ். காரர்களே.

பாஞ்சால, வங்காள, எல்லைப்புறக் கவர்னர்களுக்குச் சகுனிகளாக இருந்து கொண்டு, அம் மாகாணங்களில் நடைபெறும் படுகொலைகளையும் தூண்டி விடுவோர் மேற்படி கோஷ்டியினர்தான் என்றும் கூறப்படுகிறது.

அதாவது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைத் தகர்த்த இந்தியர்கள் மீது ஐ. ஸி. எஸ். வர்க்கம் முழு வஞ்சம் தீர்க்க முனைந்திருக்கிறது என்றே கருதவேண்டியிருக்கிறது.

எனவே, இவ்வளவு தூரம் எல்லை கடந்த விசுவாசமுள்ள உத்தியோகஸ்தர்களை பிரிட்டிஷ் சர்க்கார் கைவிடுவார்களா?

அவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒரு "நோபல் பரிசு" கொடுக்க பிரிட்டிஷ் சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள்!

முழு நிர்வாகப் பொறுப்பையும் இந்தியர்களிடம் மாற்றிய பின்,

"சுவர்க்கப் பிறவிகளா"ன ஐ. ஸி. எஸ். கோஷ்டியின் நிலைமையும், குறிப்பிட்ட இதர சிவில், இராணுவ அதிகாரிகளின் நிலைமையும் என்ன என்ற பிரச்னை எழுந்தது.

இவ்விஷயமாக பிரிட்டிஷ் சர்க்காருக்கும் இடைக்கால தேசிய சர்க்காருக்கும் நடந்த சமரசப் பேச்சின் பலனாகச் சில முடிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

எதிர்காலத்தில் அவர்கள் உத்தியோகத்தில் இருந்தாலும் சரி, அல்லது உத்தியோகத்தை விட்டுவிட்டு ஊருக்குப் போய்விட்டாலும் சரி, அவர்களின் சுக ஜீவனத்துக்கு அணுவளவு பாதகமும் ஏற்படக் கூடாதென்பதில் பிரிட்டிஷ் சர்க்கார் மிகுந்த சிரத்தை கொண்டுள்ளனர் என்பதையே, மேற்படி உத்தியோகஸ்தர்களுக்குக் காட்டப்பட்டுள்ள எல்லை மீறிய சலுகைகள் நிரூபிக்கின்றன.

இந்தியர்களின் கைக்கு முழு நிர்வாகப் பொறுப்பும் வந்த பின், இந்திய மந்திரிகளின் கீழ் உத்தியோகத்தில் இருக்க விரும்புவோருக்கு முன் போலவே சம்பளம், ரஜா உரிமை, பென்ஷன், பாதுகாப்புகள் எல்லாம் உண்டு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

எனவே, எதிர்காலத்தில் இந்தியாவின் பொருளாதார நிலைமை எப்படியிருந்தாலும், ஐ. ஸி. எஸ். வர்க்கத்தின் அதிர்ஷ்ட சக்கரம் மாத்திரம் எப்போதும் போலவே ஓடிக் கொண்டிருக்கும் என்று ஏற்படுகிறது.

இது தான் இப்படி என்றால், இனி இந்தியாவில் உத்தியோகம் வகிக்க விருப்பமில்லாதவர்களுக்கு இன்னும் அதிக அதிர்ஷ்டம் அடித்திருக்கிறது.

அதாவது, அவர்கள் தங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பென்ஷன் தொகையுடன், ஈடுப் பணம் என்று ஒரு பெருந் தொகைக்கும் உரியவர்கள் ஆகின்றார்கள்.

இந்தியாவில் பதினாறு வருஷ காலம் உத்தியோகம் வகித்த ஐ. ஸி. எஸ். காரர்களுக்கு 8000 பவுன், அதாவது ஒரு நோபல் பரிசுக்கு உரிய தொகை ஈடாகக் கிடைத்துவிடுகிறது.

அதற்குக் குறைந்த காலமோ அல்லது அதிக காலமோ உத்தியோகம் வகித்தவர்கள் மேற்படி தொகைக்குக் குறைவாக பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிட்டுள்ள ஓர் அட்டவணையில் கண்டுள்ள விதம் பல்வேறு ஈடுத் தொகை பெறுவார்கள்.

மேற்படி ஈடுத் தொகை யார் கொடுப்பதென்பது பின்னர் நிர்ணயிக்கப்பட வேண்டிய விஷயம் என்று இந்தியா மந்திரியின் அறிக்கை கூறுகிறது. இதிலிருந்தே அநியாயமான அந்த ஈடுத் தொகை கொடுக்கும் விஷயமாகத் தகராறு ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது.

இந்தியர்களின் க்ஷேமத்துக்கு எப்போதும் இடையூறாக இருந்து வந்துள்ள ஐ. ஸி. எஸ். வர்க்க உத்தியோகஸ்தர்கள், பழைய உரிமைகளுடன் தொடர்ந்து பதவிகளில் இருக்க இந்திய சர்க்கார் இசைந்ததே பெரிய காரியமாகும். அவ்வாறு இசைந்ததன் மூலம் இந்திய தேசிய சர்க்கார் பகைவர்களும் புகழுமாறு பெருந்தன்மையாக நடந்து கொண்டிருப்பதுடன், தாங்கள் வெறுப்பது பிரிட்டிஷ் ஆட்சி முறையையேயன்றி பிரிட்டிஷாரை அல்ல என்பதையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அப்படியிருந்தும், அவ்விதம் தொடர்ந்து உத்தியோகம் வகிக்க விரும்பாதவர்கள் பென்ஷன் வாங்கிக் கொண்டு பேசாமல் ஊருக்குப் போய் விடுவதுதான் நியாயம். அவ்வாறு பென்ஷன் கொடுத்து அனுப்ப இந்திய சர்க்காரும் தயாராக இருக்கிறார்கள்.

அத்தகையோருக்கு பிரிட்டிஷ் சர்க்கார் தங்களுடைய நிதியிலிருந்து எண்ணாயிரம் பவுன் அல்ல, எண்பதினாயிரம் பவுன் வேண்டுமானாலும் வெகுமதி கொடுக்கட்டும்.

ஆனால் அந்தப் பளுவை இந்தியர்களின் தலையில் சுமத்த சூழ்ச்சி செய்வது பெரும் அக்கிரமம் ஆகும்.

இந்தியர்களான ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்கள் சம்பந்தப்பட்ட வரையில் அதிக சிக்கல்கள் எதுவும் எழ இடமில்லை. இவர்களிலும் குறிப்பிட்ட சிலர் பிரிட்டிஷ் அறிக்கையின்படி ஈடுத் தொகைக்கு உரியவர்கள். எனினும், அவர்கள் அன்னிய ஆட்சியின் கீழ் உத்தியோகம் வகிப்பதைக் காட்டிலும், தேசிய சர்க்காரின் கீழ் உத்தியோகம் வகிப்பது எவ்வளவோ பெருமை என்பதை உணர்ந்து, தங்களுடைய அறிவையும் உழைப்பையும் தேச நலனுக்காக அர்ப்பணம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

அபலையின் கண்ணீர்



கல்கி

நாலாம் பாகம்

தேசத் தொண்டன் சிவராஜனுக்கு நினைவு வந்து நாலு நாள் வரையில் அவன் படுக்கையிலேயே இருக்கும்படி நேர்ந்தது. தினம் இரண்டு தடவை டாக்டர் வந்து பார்த்துவிட்டுப் போனார். பகல் ஒரு நர்ஸும் இரவு ஒரு நர்ஸும் அவனைக் கவனித்துக் காத்து வந்தார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர் தனராஜ் காலையிலும் பிற்பகலிலும் இரவிலும் அவ்வப்போது வந்து இரண்டு நிமிஷம் இருந்து அவனுடைய தேக நிலைமையைப் பற்றி விசாரித்துவிட்டு உடனே போய்விடுவார். எனவே சிவராஜ் அவரைக் கேட்க வேண்டும் என்று நினைத்திருந்த விஷயம் எதையும் கேட்க முடியவில்லை.

ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததும் இன்ஸ்பெக்டர் தனராஜைச் சக்கைப்போடு போடுவது என்று சிவராஜன் தன் மனதிற்குள் நிர்மாணித்திருந்தான். இருளடைந்த வீட்டில் பிடரியில் அடிபட்டுத் தான் மூர்ச்சித்து விழுந்த அன்றிரவு சகுந்தலை கூறிய விவரங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அவன் நினைவுக்கு வந்திருந்தன. அவை யெல்லாம் உண்மையாகத்தான் இருக்க வேண்டும் என்று அவன் நம்பினான். சகுந்தலையின் முகபாவமும் கண்ணின் கலக்கமும் பேச்சின் உருக்கமும் அப்படி அவனுடைய உள்ளத்தில் நம்பிக்கையை உண்டு பண்ணியிருந்தன. தன்னுடைய அறைக்கு வந்திருந்த போது அவள் சொல்லியதற்கும் மறுநாள் இரவு சொல்லியதற்கும் இருந்த முரண்பாடுகளை அவன் பொருட்படுத்தவில்லை. ஒரு அபலைப் பெண்ணின் கண்ணீருக்கு முன்னால் அவளுடைய பேச்சில் காணப்படும் சொற்ப முரண்பாடுகள் எம்மாத்திரம்? எப்பேர்ப்பட்ட பெரிய முரண்பாடுகளாகத்தான் இருந்தாலும், மை தீட்டிய கண்களின் கண்ணீரிலே அவையெல்லாம் கரைந்து மறைந்து போகாமல் நிற்க முடியுமா?

எனவே, இன்ஸ்பெக்டர் தனராஜ்தான் சகுந்தலை மூலமாகத் தன்னை மயக்கி அந்த இருளடைந்த பாழும் வீட்டுக்குத் தருவித்திருக்கவேண்டும். இம்மாதிரி காரியங்களுக்கெல்லாம் பெண் 'ஒற்றர்களை மேனாட்டுப் போலீஸார் உபயோகிப்பது உண்டு என்று கதைகளில் சிவராஜன் படித்திருந்தான். அந்த முறையை இப்போது இங்கேயும் உபயோகிக்கிறார்கள் போலும்! ஆனால், மேனாட்டுப் பெண்களைப்போல் இந்தியப் பெண்கள் அவ்வளவு ஈவிரக்கமற்ற பிசாசு ஜன்மங்களாய் இருக்க முடியாதல்லவா? ஆகையினால்தான் சகுந்தலை தன்னிடம் உண்மையைச் சொல்லிவிட்டாள்! அவள் சொற்படி அந்த வீட்டிலிருந்து தான் போவதற்குள்ளே இன்ஸ்பெக்டர் தனராஜ் அங்கே வந்து தன்னைப் பின்புறமிருந்து தாக்கியிருக்கவேண்டும். தான் தலை சுழன்று கீழே விழும் தறுவாயில் இன்ஸ்பெக்டர் தனராஜின் உருவம் ஒரு கண நேரம் தன் கண் முன் தோன்றியது சிவராஜனுக்கு நன்றாக ஞாபகம் இருந்தது. தான் நினைவிழந்து கீழே விழுந்த பிறகு தனராஜ் பயந்து போயிருக்கக் கூடும்! அல்லது நடந்ததை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சகுந்தலை உண்மையை வெளியில் சொல்லிவிடுவதாக இன்ஸ்பெக்டரைப் பயமுறுத்தியிருக்கலாம். கொலைக் குற்றத்

துக்குப் பயந்தே தனராஜ் தன்னை இங்கே கொண்டுவந்து சேர்த்துச் சிகிச்சை செய்வித்து வருகிறார். அதனாலேதான் தன்னுடன் சற்று உட்கார்ந்து பேச இஷ்டமில்லாமல் ஓடி ஓடிப் போகிறார்!—ஆம்! இப்படியெல்லாம் செய்வதால் தப்பித்துக் கொண்டு விடலாம் என்று எண்ணமா? ஒரு நாளும் முடியாது! தனக்கு உடம்பு மட்டும் சரியாகி நடமாடுவதற்குத் தெம்பு ஏற்படட்டும்; அப்புறம் பார்க்கலாம் ஒரு கை! சிநேகத் துரோகமும், நம்பிக்கைத் துரோகமும் செய்து தன் உயிரையே வாங்கிவிடப் பார்த்த அந்தப் பாதகனை ஒருநாளும் சும்மா விட்டுவிடப் போவதில்லை.

ஆனால் இன்ஸ்பெக்டர் தனராஜ் இப்படியெல்லாம் எதற்காகச் செய்திருக்க வேண்டும்? இவ்வளவு நாளும் தன்னுடன் ஒத்துழைத்துவிட்டு, அத்தியந்த சிநேகிதர் போல் நடித்துவிட்டு, என்னத்திற்காக இப்படிப்பட்ட வஞ்சகச் செயல் செய்ய வேண்டும்?

கேட்பானேன்? காரணம், கண்டிராக்டர் துரைராஜின் பணத்தின் சக்திதான்! இத்தனை நாளும் ஏதோ யோக்கியமாய் இருந்து வந்த தனராஜைக் கடைசியாக அந்த ராட்சதன் தன்னுடைய பண வலையில் போட்டுக்கொண்டு விட்டான். வஞ்சப் பேயினால் அண்டப்பட்டுத்தான் இந்தக் கொலை பாதகச் செயலை இன்ஸ்பெக்டர் தனராஜ் செய்திருக்க வேண்டும்! ஆ! தனக்கு உடம்பு மட்டும் சரியாகட்டும்! அப்புறம்......?

இப்படிப்பட்ட எண்ணங்களினால் சிவராஜனுடைய உள்ளம் கொதிப்படைந்து வெடிக்கத் தயாராயிருந்த சமயத்தில், அதாவது சிவராஜன் பிடாரியில் அடிபட்டு விழுந்த ஐந்தாம் நாள் பிற்பகலில், இன்ஸ்பெக்டர் தனராஜ் அவன் படுத்திருந்த அறைக்குள்ளே வந்தார். வந்து அவன் அருகில் உட்கார்ந்தார்.

“சிவராஜ்! உடம்பு எப்படியிருக்கிறது? கொஞ்ச நேரம் பேசலாம்போல் இருக்கிறதா?” என்று கேட்டார்.

“ஆகா! திவ்யமாய்ப் பேசலாம். உம்மிடம் பேசிவிட்டுப் போவதற்காகத்தான் நாலு நாளாய்க் காத்துக் கொண்டிருக்கிறேன்! இல்லாவிடில் இந்த நரகக் குழியிலிருந்து அப்போதே தப்பித்துக் கொண்டு போயிருப்பேன்!” என்றான் சிவராஜ்.

தனராஜ் ஆச்சரியமும் அருவருப்பும் அடைந்து, “என்ன, சிவராஜ்! இப்படிப் பேசுகிறாய்? இந்த இடம் உனக்கு நரகக் குழியாகவா தோன்றுகிறது? உன்னை உயிர் பிழைக்கச் செய்வதற்காக நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன், தெரியுமா?” என்றார்.

“அடாடா! கேட்பானேன்? அன்றைக்கே சேர்த்தாற்போல் இன்னும் ஒரு அடி பின்னாலிருந்து போட்டிருந்தால் ஒரு வழியாகச் செத்துத் தொலைந்து போயிருப்பேன்! என்னைப் பிழைக்க வைப்பதற்காக இவ்வளவு கஷ்டப்பட நேர்ந்திராது.”

“இது என்ன உளறல்? சிவராஜ்! உன்னை நான்தான் பிடாரியில் அடித்தேனென்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா, என்ன? வெறும் மூடத்தனமாக வல்லவா இருக்கிறது? உன்னை எதற்காக நான் அடிக்கப் போகிறேன்?” என்று தனராஜ் ஆத்திரத்துடனே கேட்டார்.

எவ்வளவோ கஷ்டப்பட்டு ஒருவனுடைய உயிரைக் காப்பாற்றிய பிறகு, அவன் நன்றி செலுத்துவதற்குப் பதிலாகத் தன்னைக் கொல்ல முயற்சித்தாய் என்று அபாண்டம் சுமத்தினால், ஆத்திரம் வராமல் என்ன செய்யும்?

ஆனால் ஐந்து நாள் யோசனை செய்து தீர்மானமான முடிவுகளுக்கு வந்திருந்த சிவராஜன் இன்ஸ்பெக்டரின் ஆத்திரத்தைப் பொருட் படுத்தாமல், “ஓஹோ! பொய் சொல்லிச் சாதிக்கப் பார்க்கிறீரா? நீர் என்னை அடிக்கவில்லையென்றால் வேறு யார் அடித்தது?” என்று கேட்டான்.

“தம்பி சிவராஜ்! அதைக் கண்டுபிடிக்கத்தான் சென்ற நாலு தினங்களாக நான் பெருமுயற்சி செய்து வருகிறேன். ஆனால், ஓ தேச பக்தத் திலகமே! கள்ள மார்க்கெட் சாமான் வண்டிகளைக் கண்டுபிடிப்பதற்காகப் பிடாரியம்மன் கோவிலில் இருக்க வேண்டிய சமயத்தில் நீர் எங்கே இருந்தீர்? மாசிக்கோனார் வீதியில் உள்ள இரட்டை மாடி வீட்டு மெத்தையில் உமக்கு என்ன வேலை?” என்று இன்ஸ்பெக்டர் குத்தலாய்ப் பேசினார்.

“என்னைக் கேட்கும் நீர் மட்டும் அப்போது எங்கேயிருந்தீர்? அதே வீட்டுக்கு அச்சமயம் நீரும் வந்தீர் அல்லவா? எதற்காக? நீர் அங்கே வரவில்லையென்று சொல்லத் துணிவீரா? வரவில்லையென்

றால், என்னை இங்கே எப்படிக் கொண்டு வந்து சேர்த்தீர்?" என்றான் சிவராஜன்.

"தம்பி, சிவராஜ்! சரியான கேள்வி கேட்டாய்! இதோ இந்தக் கடிதந்தான் என்னை அந்த வீட்டுக்கு அச்சமயம் கொண்டுவந்து சேர்த்தது. பார் நன்றாய்!" என்று சொல்லிக் கொண்டே இன்ஸ்பெக்டர் ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினார். அது, 'உம்முடைய சிநேகிதர் சிவராஜுக்கு ஆபத்து' என்று எச்சரிக்கை செய்து அவருக்கு வந்த கடிதந்தான்.

சிவராஜன் அக்கடிதத்தை ஒரு தடவை இரண்டு தடவை மூன்று தடவை படிக்கப் படிக்க அவனுடைய மூளை அதிகமாகக் குழம்பிற்று. இன்ஸ்பெக்டருக்கு இந்த எச்சரிக்கைக் கடிதம் யார் எழுதி யிருக்கக் கூடும்? அவனுக்கு ஞாபகம் இருந்தவரையில், தனக்கு வந்த கடிதத்தின் கையெழுத்தைப் போலவே இதுவும் இருந்தது. தன்னை வரும்படி எழுதியவன் இன்ஸ்பெக்டருக்கும் எதற்காக இந்த எச்சரிக்கைக் கடிதத்தை எழுதி யிருக்கிறான்? இதை அவன் எழுதியது உண்மையானால், தனக்கு அந்த வீட்டில் நேரக் கூடிய அபாயத்தை அவன் அறிந்திருந்ததாக அல்லவா ஏற்படுகிறது? அப்படித் தெரிந்திருந்தும் தன்னை எதற்காக வரும்படி எழுதினான்? ஓ! இதுவும் இந்த இன்ஸ்பெக்டர் தனராஜின் சூழ்ச்சியாகத்தான் இருக்க வேண்டும்! சகுந்தலையை வற்புறுத்தித் தனக்குக் கடிதம் எழுதச் சொன்னது போல், இப்போது இந்தப் பொய்க் கடிதமும் எழுதப் பண்ணி யிருக்கிறார்! தன்னை ஏமாற்றுவதற்காகத்தான்!



"சிவராஜன்! உன்னை நான் தேடிக் கொண்டு அந்த இருளடைந்த வீட்டுக்கு வரக் காரணம் உண்டு என்று இப்போதாவது ஒப்புக்கொள்கிறாயா?" என்று தனராஜ் கேட்டார்.

"நான் ஒன்றும் ஒப்புக்கொள்ள மாட்டேன். இந்தக் கடிதம் யார் எழுதியது, எதற்காக எழுதியது என்று எனக்கு எப்படித் தெரியும்?"

"எப்படித் தெரியுமா? ஓஹோ! உனக்கு வந்த கடிதங்களும் இந்தக் கடிதமும் ஒரே கையெழுத்து என்று தோன்றவில்லையா?"

"ஆகா! அப்படி யென்றால் எனக்கு வந்த கடிதங்களைத் திருடிக்கொண்டது நீர் தான்! நல்ல யோக்கியர் நீர்!"

"தம்பி, சிவராஜ்! உனக்கு வந்த கடிதங்களை நான் அபகரித்தது உண்மைதான்! ஆனால் எதற்காக அபகரித்தேன்? உன்னை ஏமாற்றிப் படுகுழியில் ஆழ்த்த யாரோ பிரயத்தனப் படுகிறார்கள் என்று தெரிந்து கொண்டு உன்னைக் காப்பாற்ற முயற்சித்தேன். அப்பனே! ஓர் அழகிய பெண் முகத்தைக் கண்டு, நீ இப்படி ஏமாந்து போவாய் என்று நான் கனவிலும் கருத வில்லை. எதிரி விரித்த வலையில் இவ்வளவு சுலபமாக நீ

சிக்கிக் கொள்வாய் என்று நான் நினைக்கவே யில்லை!"

"இன்ஸ்பெக்டர் ஸார்! அழகிய பெண் முகத்தைக் கண்டு நான் மயங்கி விடவில்லை. அபலையின் கண்ணீருக்கு இரங்கினேன்!"

"அபலையாம்! கண்ணீராம்! கடவுளே! இந்த ஆண் பிள்ளைகளுக்கு எப்போதுதான் புத்தி வரச் செய்வாயோ?" என்றார் இன்ஸ்பெக்டர்.

தனராஜின் கூற்றில் ஒருவேளை உண்மையிருக்குமோ என்ற சந்தேகம் சிவராஜனின் மனதில் உதித்தது. ஆயினும் அதை வெளியிடாமல், "நீர் சொல்வதுபோல் அந்தப் பெண் மோசக்காரி என்று நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். உமக்கு வந்த கடிதம் அவன் எழுதியதுதான் என்பது என்ன நிச்சயம்? எனக்கு வந்த கடிதங்களைத் திருடிக் கொண்ட நீர், அவற்றிலுள்ள எழுத்தைப் போல் 'போர்ஜரி' செய்திருக்கலாமல்லவா?"


"எதற்காக நான் போர்ஜரி செய்ய வேண்டும்?"

"எதற்காகவா? உம்முடைய குற்றத்தை மறைப்பதற்காகத்தான்! நீ எனக்குச் செய்த பிசகைத் துரோகத்தை......"

"அப்பனே! உனக்குக் கடிதம் எழுதியவன்தான் எனக்கும் எழுதினான் என்று நிரூபித்தேனானால்?"

"நிரூபித்தால் நீர் துரோகம் செய்யவில்லையென்று ஒப்புக்கொள்கிறேன். அவன் ஏன் அப்படிச் செய்தான் என்பதை அப்புறம் கண்டு பிடிக்க வேண்டும்......"

"சரி, கொஞ்சம் பொறு!" என்று சொல்லி விட்டு இன்ஸ்பெக்டர் எழுந்தார்.



"எங்கே போகிறீர்?"

"நான் சொன்னதை நிரூபிப்பதற்குத் தான்."

"எப்படி நிரூபிப்பீர்?"

"கடிதம் எழுதிய பெண்ணையே இங்கே கூட்டி வந்து நிரூபிக்கிறேன்."

சிவராஜின் இருதயம் துரித காலத்தில் அடித்துக் கொள்ளத் தொடங்கியது. அவள் அபலைப் பெண்ணாயிருந்தாலும் சரி, மோசக்காரியாகவே இருந்தாலும் சரி, அவளைப் பார்க்க வேண்டுமென்னும் ஆவல் சிவராஜின் மனதில் பொங்கி எழுந்தது.

இன்ஸ்பெக்டர் தனராஜ் அறையிலிருந்து வெளியே சென்று ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் மறுபடியும் உள்ளே வந்தார். அவருடன் ஒரு பெண்ணும் வந்தாள். ஆனால் அவள் சிவராஜின் எதிர்பார்த்த சகுந்தலை யல்ல. சுமார் பத்து வயதுச் சிறுமி. சிவராஜ் உள்ளத்தில் எழுந்த அளவில்லாத ஏமாற்றத்துடன் இந்தச் சிறுமியை எங்கே பார்த்திருக்கிறோம் என்ற கேள்வியும் எழுந்தது.

கேள்விக்குப் பதில் அடுத்த நிமிஷமே கிடைத்து விட்டது. ஆம்; அன்று மத்தியானம் ஓட்டலில் சாப்பிட்டு விட்டுத் திரும்பியபோது சந்தின் மூலையில் நின்று தன்னிடம் கடிதம் கொடுத்த சிறுமிதான் இவள்!

"இன்ஸ்பெக்டர், ஸார்! இது என்ன விளையாட்டு? இந்தச் சிறுமியை எதற்காக அழைத்துக்கொண்டு வந்தீர்கள்?" என்று சிவராஜ் கேட்டான்.

"கொஞ்சம் பொறு, தம்பி! பொறுத்தார் பூமி ஆள்வார்!" என்றார் இன்ஸ்பெக்டர். பிறகு அந்தச் சிறுமியைப் பார்த்து, 'குழந்தை! உன் பெயர் என்ன?" என்று கேட்டார்.

"என் பெயர் ரஞ்சனி!" என்றாள் சிறுமி.

"உன் அக்காவின் பெயர்?"

"அதைத்தான் சொன்னேனே, ஐயா!" என்று சிறுமி தேம்ப ஆரம்பித்தாள்.

"இன்னொரு தடவை சொல்லு, குழந்தை' புரட்சி வீரர் சிவராஜைத்தான் உனக்குத் தெரியுமே? அவருக்கு உன் கதை பூராவும் சொல்லு! சொன்னால் உனக்கும் உன் அக்காவுக்கும் வேண்டிய ஒத்தாசை அவர் செய்வார்!" என்றார் இன்ஸ்பெக்டர்

"என் அக்காவின் பெயர் பாக்கியம்" என்றாள் ரஞ்சனி.

"பாக்கியமா? அது யார்?" என்றான் சிவராஜ்.

"என் அக்காவின் பெயர் சகுந்தலை என்று அன்றைக்கு உங்களிடம் பொய் சொன்னேன். அக்காவின் நிஜப் பெயர் பாக்கியம். சகுந்தலை இல்லை!" என்றாள் சிறுமி.

"உன்னுடைய நிஜப் பெயர் என்ன?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

சிறுமி கண்ணைக் கசக்கிக்கொண்டே, "என் நிஜப் பெயர் அம்புஜம்!" என்றாள்.

"அப்படிச் சொல்லு!" என்றார் இன்ஸ்பெக்டர். பிறகு தன்னுடைய கையில் வைத்திருந்த பள்ளிக்கூட 'எக்ஸர் ஸைஸ்' நோட்டைச் சிவராஜின் கையில் கொடுத்தார். அதன் மேலே "ஆர். அம்புஜம், I பாரம், B செக்ஷன்" என்று எழுதியிருந்தது.

நோட்டைப் பிரித்துப் பார்த்த சிவராஜன் ஆச்சரியக் கடலில் மூழ்கி விட்டான். ஏனெனில் அதில் எழுதியிருந்த பாடங்களின் கையெழுத்து, தத்ரூபமாகத் தனக்கு வந்த கடிதங்களின் கையெழுத்தை ஒத்திருந்தது.

நோட்டை நன்றாய்ப் புரட்டிப் பார்த்து விட்டுச் சிவராஜன் இன்ஸ்பெக்டரை எறிட்டுப் பார்த்தான்.

"மிஸ்டர் தனராஜ்! இதென்ன, எல்லாம் ஒரே மர்மமாயிருக்கிறதே? என் தலை சுற்றுகிறது! இந்தப் பெண் உண்மையில் யார்? இவள்தானா நமக்கு வந்த கடிதங்களையெல்லாம் எழுதினாள்? எதற்காக எழுதினாள்?" என்று கேட்டான்.

"தம்பி! கொஞ்சம் பொறு! முதலில் இந்தப் பெண்ணின் கதையைக் கேட்போம். அம்புஜம்! நீ என்னிடம் சொன்ன கதையைச் சிவராஜிடம் சொல்லு. புரட்சி வீரன் சிவராஜ்தான் உனக்கும் உன் அக்காவுக்கும் உதவி செய்யக் கூடியவர்!" என்றார்.

உடனே அம்புஜம் சிவராஜைப் பார்த்து, "ஐயா! புரட்சி வீரர் சிவராஜ் அவர்களே! நானும் என் அக்காவும் பெரிய சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம். நீங்கள் தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும். முதலில் இந்தச் சண்டாளப் போலீஸ் இன்ஸ்பெக்டர் செய்த கொடுமையைத் தாங்கள் விசாரித்து நியாயம் செய்ய வேண்டும்! இவர் என்ன செய்தார் தெரியுமா? அக்காவைப் பிரிந்து வீட்டில் வருத்தப்பட்டுக் கொண்டு நான் உட்கார்ந்திருக்

கும்போது இவர் பலாத்காரமாக என்னைத் தூக்கிக் கொண்டு வந்து விட்டார். என்னை உண்மையைச் சொல்லச் செய்வதற்காக இவர் என் விரல் நகங்களின் இடுக்கில் ஊசிகளை ஏற்றிச் சித்திரவதை செய்தார். இவரை நீங்கள் இலேசில் விட்டுவிடக் கூடாது. பொதுக் கூட்டங்களில் இவரை நீங்கள் ஏசு ஏசு என்று ஏசவேண்டும். சுளீர் சுளீர் என்று சவுக்கடி கொடுக்க வேண்டும். வெளுத்து வாங்க வேண்டும். காங்கிரஸ் சர்க்காருக்கு எழுதி இவரை வேலையை விட்டு 'டிஸ்மிஸ்' செய்துவிட வேண்டும்!”

சிவராஜ் ஒன்றும் புரியாமல் திகைத்து இன்ஸ்பெக்டரின் முகத்தை நோக்கினான்! இன்ஸ்பெக்டர் அவனுடைய முகத்தில் தோன்றிய பரிதாபமான திகைப்பைப் பார்த்து விட்டுக் குபீரென்று சிரித்தார்.

“தம்பி சிவராஜ்! இதெல்லாம் பொதுக் கூட்டங்களில் உன்னுடைய காரசாரமான பேச்சுக்களை இந்தப் பெண் கேட்டதின் பலன்” என்றார்.

பிறகு அச்சிறுமியைப் பார்த்து, “அம்புஜம்! உண்மையைச் சொல்லு! உன்னுடைய விரல் நகங்களின் இடுக்குகளில் நான் உண்மையாகவே ஊசி ஏற்றினேனா?” என்று கேட்டார்.

“ஏற்றவில்லை; ஆனால், ‘ஏற்றுவேன்’ என்று நீங்கள் என்னைப் பயமுறுத்தவில்லையா?” என்றாள் அம்புஜம்.

“ஆனால் நானாக உன்னை அப்படிப் பயமுறுத்தினேனா? நீ என்னைப் பார்த்து, ‘நிஜத்தைச் சொல்லாவிட்டால் என் நகக் கணுக்களில் ஊசி ஏற்றுவீர்களா?’ என்று கேட்டாய். நான் ‘ஆமாம்!’ என்றேன். அவ்வளவுதானே?”

“அவ்வளவுதான்! நீங்களாகச் சொன்னால் என்ன? நான் கேட்டுப் பதில் சொன்னால் என்ன? எல்லாம் ஒன்றுதானே?’ என்றாள் அம்புஜம்.

“போனால் போகட்டும். இப்போதுதான் புரட்சி வீரர் சிவராஜிடம் நீ புகார் சொல்லி விட்டாயே? அவர் உன்னைக் காப்பாற்றுவார். நீ யார், எப்படி உனக்குப் பாக்கியத்தம்மாள் அக்காவானாள் என்கிற கதையை இவரிடம் சொல்லு!” என்றார் இன்ஸ்பெக்டர்.

அம்புஜம், “என்னுடைய கதையைச் சொன்னால், என் அக்கா இருக்குமிடத்தைக் கண்டு பிடித்துச் சொல்வீர்களா, ஐயா!’ என்று இரக்கமான குரலில் சிவராஜனைப் பார்த்துக் கேட்டாள்.

சிவராஜனுடைய நெஞ்சில் வலியும் வேதனையும் உண்டாயின.

விம்மலுடன் கூடிய குரலில், “உன் அக்கா எங்கே?” என்று அவன் கேட்டான்.

“அதுதானே தெரியவில்லை. அன்று இராத்திரியிலிருந்து என் அக்காவைக் காணவில்லை!” என்று சொல்லிவிட்டு, அம்புஜம் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

“வேண்டாம், அம்புஜம்! அழாதே! உன்னுடைய கதையை என்னிடம் சொன்னது போல் இவரிடமும் சொல்லு. சொன்னால், நாங்கள் இரண்டு பேருமாகச் சேர்ந்து தேடி உன் அக்காளை எப்படியாவது கண்டு பிடித்துத் தருகிறோம்” என்று இன்ஸ்பெக்டர் தனராஜ் கூறினார்.

கொஞ்சம் கொஞ்சமாக அம்புஜத்தின் தேம்பல் குறைந்து வந்து கடைசியில் அடியோடு நின்றது. இன்ஸ்பெக்டர் தனராஜ் இன்னும் கொஞ்சம் அச் சிறுமியை வைத்தியம் செய்த பிறகு அவள் தன் கதையைச் சொன்னாள். அது வருமாறு:—

அம்புஜத்துக்குச் சொந்த ஊர் எது, தாய் தகப்பனார் யார் என்பது ஒன்றும் ஞாபகம் இல்லை. ஒரு நாள் நதிக்கரையில் விளையாடிக் கொண்டிருந்த போது கால் தவறித் தண்ணீரில் விழுந்து விட்டாள். இரண்டு மூன்று வாய் தண்ணீர் குடித்ததும் அவளுக்குச் சுய நினைவு போய்விட்டது. மறுபடியும் நினைவு வந்தபோது அவளை யாரோ மடியில் போட்டுக்கொண்டு அவளுடைய வாயில் சுடச் சுடக் காப்பி விட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது. அம்புஜத்துக்குக் காப்பியில் ரொம்பப் பிரியம். ஆகவே அவள் முதலில் தான் பராசக்தியாகிய பார்வதி தேவியின் மடியில் படுத்திருப்பதாகவும், தேவிதான் தனக்குக் காப்பி கொடுத்துக் கொண்டிருப்பதாகவும் எண்ணினாள். பிறகு பராசக்தி யில்லையென்றும் ஒரு மானிடப் பெண்தான் என்றும் தெரிந்து கொண்டாள். அவளை 'அக்கா' என்று கூப்பிடத் தொடங்கினாள். தன்னுடைய ஊர், பெற்றோர் முதலிய விவரங்களைச் சொல்ல முடியாமலிருந்ததால், பாக்கியம் அம்புஜத்தைத் தன் தங்கையாகவே பாவித்துத் தன் வீட்டிலேயே வளர்த்து வந்தாள். சில நாளில் அக்கா ஒரு பெரிய கஷ்டத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாள் என்பது தங்கைக்குத் தெரிய வந்தது. அந்தக் கஷ்டம் ஒரு முரட்டுப் பயங்கர மனிதனை அக்கா கலியா

ணம் செய்து கொண்டிருந்ததுதான். அகலமாயும் நீளமாயும் உயரமாயும் கோர ரூபமாயும் இருந்த அந்த மனிதன் அடிக்கடி அக்காளைப் படாத பாடு படுத்தி வந்தான். கள்ளுக் குடிப்பதற்கு அக்காளிடம் பணம் கேட்பதும் குடித்து விட்டு வந்து அக்காளை அடிப்பதும் சர்வ சகஜமா யிருந்தது. இதையெல்லாம் பார்த்து அம்புஜத்துக்குச் சகிக்க வில்லை. அக்காவுக்காகப் பரிந்து அந்த முரட்டு மனிதனிடம் சில சமயம் அம்புஜம் சண்டை பிடித்தான். அதற்காக அவனையும் அந்த மனிதன் அடித்துத் துரத்தினான். சில சமயம் இராத்திரியில் அவனை வீட்டை விட்டுத் துரத்தி விட்டுக் கதவைத் தாளிட்டுக் கொண்டு விடுவான். ஆனாலும் அக்காளிடம் உள்ள பாசத்தினால் அம்புஜம் அந்த வீட்டை விட்டுப் போக வில்லை. வேறு போக்கிடமும் அவனுக்குக் கிடையாது. ஆகையால் இரவெல்லாம் வீட்டு வாசலிலேயே படுத்திருந்து விட்டுக் காலையில் கதவு திறந்ததும் உள்ளே போய் அக்கா பாக்கியத்துக்குச் சமாதானம் சொல்லுவான்.

வரவர அந்த முரட்டு மனிதனுடைய கொடுமை அதிகமாகிக் கொண்டு வந்தது. அக்கா அவனிடம் அடி படுவதும் உதை படுவதும் தங்கை அம்புஜத்துக்குப் பொறுக்கவில்லை. அக்காவின் கஷ்டத்தை நிவர்த்திக்க ஏதாவது செய்தே தீரவேண்டுமென்று அவன் தீர்மானித்தான். புரட்சி வீரர் சிவராஜின் ஆவேசமான பிரசங்கங்களைச் சில சமயம் அம்புஜம் கேட்பதுண்டு. ஆகவே அவரிடம் சொன்னால் அக்காவுக்கு விமோசனம் பிறக்கும் என்று எண்ணினான். எண்ணி, அக்காவை யோசனை கேட்காமலே சிவராஜுக்கு அந்த முதல் கடிதத்தை எழுதினான். பிறகு அக்காவிடம் சொன்னான். அக்கா அம்புஜத்தை ரொம்பவும் கோபித்துக் கொண்டு சிவராஜிடம் உண்மையைச் சொல்லிவிட்டு வருவதற்காகச் சென்றாள். ஆனால் சிவராஜைப் பார்த்த பிறகு அவளுடைய மனம் மாறி விட்டது. கடிதம் தன் தங்கை எழுதிய பொய்க் கடிதம் என்று சொல்ல அவளுக்கு மனம் வரவில்லை. அதற்குப் பதிலாகக் கடிதத்தில் எழுதி யிருந்ததை ருசுப்படுத்துவதாகச் சொல்லி விட்டுத் திரும்பினாள்.

மறுநாள் அக்காவும் தங்கையும் யோசனை செய்து இரண்டாவது கடிதம் எழுதினார்கள். ஆனால் அக்கா தன்னுடைய பெயர் பார்வதி என்று சொல்லிவிட்டு வந்தது தங்கைக்குத் தெரியாது. ஆகையால் சகுந்தலையம்மாள் என்று தானே ஒரு பெயரைச் சிருஷ்டித்துச் சொன்னான்.

இதெல்லாம் எப்படியோ அக்காவின் முரட்டுக் கணவனுக்குத் தெரிந்து போய் விட்டது. தன்னை, அதாவது அம்புஜத்தை வீட்டுக்குள் வைத்துப் பூட்டிவிட்டு அவன் அக்காவைப் பின் தொடர்ந்து சென்றான். இரவு பாதி நிசிக்குமேல் தனியாகத் திரும்பி வந்து வீட்டைத் திறந்து சில சாமான்களை எடுத்துக் கொண்டு போய் விட்டான். அன்று முதல் அம்புஜம் தன் அக்காவின் கதி என்ன ஆயிற்று என்று தெரியாமல் ஊரெல்லாம் தேடி அலைந்து கொண்டிருக்கிறான்.

மேற்படி கதையைக் காது மூக்கு வைத்துச் சமத்காரமாக அந்தப் பத்து வயதுச் சிறுமி சொல்லிவிட்டு, மறுபடியும் விம்மிக் கொண்டே, "ஐயா! என் அக்காவுக்கு ஒரு கெடுதலும் நேராமல் இருக்குமா? அவளைக் கண்டு பிடித்துக் கொடுப்பீர்களா?" என்று கேட்டான்.

அம்புஜம் சொன்னதை யெல்லாம் நம்புவதா இல்லையா என்று சிவராஜனுக்குத் தெரியவில்லை. ஏற்கனவே இரண்டு தடவை ஏமாந்து போயிருக்கிறான் அல்லவா? எனவே, முகத்தில் கேள்விக் குறியின் பாவத்துடன் இன்ஸ்பெக்டர் தனராஜை ஏறிட்டுப் பார்த்தான்.

தனராஜ் தமக்கும் சந்தேகமாய்த்தான் இருக்கிறது என்பதற்கு அறிகுறியாக ஒரு புன்னகை புரிந்தார். பிறகு அம்புஜத்தைப் பார்த்து, "ஆகட்டும், குழந்தை! எங்களால் முடிந்த வரையில் முயற்சி செய்து உன் அக்காவைக் கண்டு பிடிக்கப் பார்க்கிறோம். ஆனால் நான் கேட்கிற இந்த ஒரு கேள்விக்கு மட்டும் உண்மையாகப் பதில் சொல்லு!" என்று கூறி, தமக்கு வந்த எச்சரிக்கைக் கடிதத்தை எடுத்துக் காட்டினார். "அம்புஜம்! இந்தக் கடிதம் நீ தானே எழுதினாய்? அக்காவுக்குத் தெரியாமல் நீயாகவே எழுதினாயா? அல்லது அக்கா சொல்லி எழுதினாயா?" என்று கேட்டார்.

மேற்படி கேள்விக்கு அம்புஜம் உடனே பதில் சொல்லாமல் தயங்கினான். என்ன பதில் சொல்லலாம் என்று அவன் யோசிப்பதாகத் தோன்றியது.

அதே சமயத்தில், பாதி மூடியிருந்த அறையின் கதவு நன்றாய்த் திறந்தது. கதவு திறந்த சத்தத்தைக் கேட்டு மூவரும் வாசற் படிப் பக்கம் பார்த்தார்கள். வாசற்படியில் அந்த அபலைப் பெண் நின்றுகொண்டிருந்தாள்; அவளுடைய கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது! (தொடரும்)

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி

177. அழிந்தது உணர்வு!

ஜடாயு ராவணனோடு சண்டையிட்டான். ராவணன் தன் வாளால் ஜடாயுவின் இரண்டு இறக்கைகளையும் வெட்டி வீழ்த்தினான். மண்ணில் வீழ்ந்து விட்டான் ஜடாயு.

ராவணன் சீதையைத் தேரில் வைத்துக் கொண்டு அதி வேகமாகச் சென்றான்.

ஜடாயு வீழ்ந்ததைப் பார்த்தாள் சீதை. "இந்த உத்தமன் இறப்பதற்காக அல்லவா, நாட்டை விட்டு நான் இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன்? விதி இன்னும் என்ன என்ன செய்யக் காத்திருக்கிறதோ!" என்று புலம்பினாள்.

இப்படி சீதைக்கு மனசு இடிந்த நிலையில் துயர வெறி மேலிடுகிறது:

"கஷ்டத்துக்கு உள்ளான என்னை 'அஞ்ச வேண்டாம்' என்று ஆறுதல் சொல்லிய இந்தத் தர்மவான் தோற்கிறதா? அந்தப் பாவி வெல்வதா?"

'அல்லல்உற் றேனைவந்(து)
அஞ்சல் என்றஇந்
நல்லவன் தோற்பதோ!
நரகன் வெல்வதோ!
வெல்வதும் பாவமோ!
வேதம் பொய்க்குமோ!
இல்லையோ அறம்?' என
இரங்கி ஏங்கினாள்.

[அல்லல் உற்றேனை: துன்பத்துக்கு உள்ளான என்னை; அஞ்சல் என்ற: பயப்பட வேண்டாம் என்ற; இந் நல்லவன் தோற்பதோ: இந்த தர்மவான் இறப்பதோ; நரகன் வெல்வதோ: நரகத்துக்கு ஆளாக வேண்டிய இந்த அரக்கன் வெல்வதோ!

குறிப்பு:—ஜடாயுவையும் ராவணனையும் வைத்துக் கொண்டு பேசும்போது சோக பாவம் தெளிவாய்த்தான் இருக்கிறது. ஆனால் அந்த இரு ஜட வஸ்துக்களையும் விட்டு விட்டு சூக்ஷ்மப் பொருள்களாகிய பாவத்துக்கும் அறத்துக்கும் போகும்போது சோகம் விண்ணுக்கே அதாவது வேறொரு உலகுக்கே போய்விடுகிறது. அத்தகைய அபூர்வமான பாவ சாதனங்கள் கம்பருக்கு அநாயாசமாக வருகின்றன! கவி அபூர்வமான சாயல் கொண்டது.]

* * *

மேலும் சீதை புலம்புகிறாள்: "ராம லக்ஷ்மணர்களே! தர்மவான்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாக உள்ள ஜடாயுவை, உங்கள் தந்தைக்கு உற்ற நண்பனை, பார்க்க வாருங்கள்! என்ன நிலையில் இருக்கிறான் என்று பார்க்க வாருங்கள்."

'நாணிலேன் உரைகொடு
நடந்த நம்பிமீர்!
நீள்நிலை அறநெறி
நின்றுளோர்க்கெலாம்
ஆணியை, உந்தையர்க்(கு)
அமைந்த அன்பனை,
காணிய வம்?' எனக்
கலங்கி விம்மினாள்.

[நாணிலேன் உரை கொடு நடந்த நம்பிமீர்: பெண்களுக்குரிய நாணம் என்பது எனக்கு இல்லையோ; அப்படி யிருந்தால் உங்களை இப்படியெல்லாம் பேசி யிருப்பேனா? அப்படி நாணமில்லாது பேசிய காரணத்தினால் அல்லவா நீங்கள் பர்ணசாலையை விட்டுப் போனீர்கள்! நீள் நிலை அறநெறி: உறுதியோடு நிற்கும் தர்ம நெறியில்; நின்றுளோர்க்கெலாம்: இருப்பவர்களுக்கெல்லாம்; ஆணியை: எடுத்துக் காட்டாக இருப்பவனை; உந்தையர்க்கு அமைந்த அன்பனை: உங்கள் தந்தை தசரதனுக்கு உற்ற நண்பனாகிய ஜடாயுவை; காணிய வம்: காண இங்கே வாருங்கள்.]

* * *

இப்படியெல்லாம் ஏக்கமுற்றிருந்த சீதையின் தன்மையையும் ஜடாயுவின் தன்மையையும் பார்த்தான் ராவணன். இனிமேலும் தேரில்ப் போனால் இடையூறு வரலாம் என்று எண்ணி, சீதையை அவளோடு ஒட்டி இருந்த பூமியோடு தேரை விட்டு வெளியே எடுத்தான்.

ஏங்குவாள் தன்மையும்,
இற(கு)இ றந்தவன்
ஆங்குறு தன்மையும்,
அரக்கன் நோக்கினான்;—
வாங்கினன் தேரின்நின்(று)
அவளை; மண்ணொடும்
வீங்குதோள் மீக்கொடு
விண்ணின் ஏகினான்.

[வாங்கினன் தேரின் நின்று அவளை மண்ணொடும்: தேரிலிருந்து சீதையை அவளிருந்த பூமியோடு அகற்றியவனாய்; வீங்கு

தோள் மீக்கொடு விண்ணின் ஏகினன்: விசாலமான தோளில் வைத்துக்கொண்டு ஆகாயத்தின் வழியே,—சென்றான்.]

∴

ஆகாயத்தில் ராவணன் போன வேகங் காரணமாகச் சீதைக்குக் கண்ணும் மனமும் சுழன்றுவிட்டன. உணர்வெல்லாம் அழிந்து போய் விட்டது. ஒன்றும் தெரியவில்லை அவனுக்கு.

'விண்ணிடை வெய்யவன்
ஏகும் வேகத்தால்
கண்ணொடு மனம்அது
சுழன்ற கற்பினாள்
உள்நிறை உணர்வழிந்(து)
ஒன்றும் ஓர்ந்திலள்,
மண்ணிடைத் தன்னையும்
மறந்து சாம்பினாள்.

[உள் நிறை உணர்வு அழிந்து: உள்ளத்தி லுள்ள நிலையான உணர்ச்சி அழிந்து: ஒன்றும் ஓர்ந்திலள்: ஒன்றும் அவளுக்குத் தெரியவில்லை; மண்ணிடைத் தன்னையும் மறந்து சாம்பினாள்: ராவணன் தூக்கிக் கொண்டு போனபோது தான் இருந்த ஆசிரமத்துத் தரைத்திலேயே கிடக்கிறோம் என்ற நினைவு கூட இல்லாமல் கிடந்தாள். மன வேதனைகளும் நீங்கின: மனந்தான் என்னசெய்யும்!]

கவிஞருடைய லக்ஷ்யம் எல்லாம் உணர்ச்சியின் உச்சத்தை அடைய வேண்டும், அதற்கு இணங்கக் கவி உருவம் பிறக்க வேண்டும் என்பது தான். வேறு லக்ஷ்யம் ஒன்றும் இல்லை.

இந்த லக்ஷ்யத்தை அடைவதற்காகவே இதர விஷயங்கள் எல்லாம் கருவிகள் ஆகின்றன. ஆகவே, மனசானது தனக்கு வேண்டிய சாதனங்களை எல்லாம் சிருஷ்டித்துக் கொள்ளுகிறது.

சீதையைத் தரையோடு தூக்கித் தேரில் வைக்கிறது, கழுகை வாதாடச் செய்கிறது, தரையோடு சீதையைத் தோளில் வைத்து ஆகாய மார்க்கமாகச் செல்லவும் செய்கிறது. என்ன வேண்டுமோ அவ்வளவையும் செய்து கொள்ளுகிறது மனசு.

" கவிஞனுடைய கண்ணானது பூமிக்கும் வானத்துக்கும் இடையே மாறி மாறிப் பாய்ந்து கொண்டிருக்கும்," என்று சொல்லி ஷேக்ஸ்பியரும் கவியுள்ளத்தின் விஸ்தாரத்தைக் காட்டி விட்டார். அது கம்பரது கவிக்கு வியாக்யானம் செய்த மாதிரி இருக்கிறது.

பேனா மன்னர்கள்

ரா.கி.

இந்த வருஷத்து அகில இந்தியப் பத்திரிகாசிரியர் மகாநாட்டில் அபிப்பிராய பேதம் ஒரே ஒரு விஷயத்திலேதான் வெளியாயிற்று. விவாதமும் அதைப் பற்றியே நடந்தது.

பிரிட்டிஷ் அதிகார வர்க்க சர்க்கார் நடந்து கொண்டிருந்த வரையில் பத்திரிகைகள் தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் போராட வேண்டியிருந்தது. அதிலும் யுத்தகாலத்தில் பத்திரிகைகளின் சுதந்திரத்துக்கு மலை போன்ற ஆபத்துகள் எத்தனையோ வந்தன. அவற்றையெல்லாம் சில சமயம் நயத்தினாலும் சில சமயம் பயத்தினாலும் பத்திரிகைகள் சமாளித்து வெற்றி கண்டன. சில சமயம் ராஜிப் பேச்சினாலும் சில சமயம் போராடியும் கூடியவரையில் தங்கள் உரிமைகளைக் காப்பாற்றிக் கொண்டன.

இப்போதோ தேசத்தின் அரசியல் நிலைமை அடியோடு மாறிப் போயிருக்கிறது. தேசத்தின் மாபெரும் தலைவர்கள் இடைக்கால தேசிய சர்க்கார் அமைத்து நடத்துகிறார்கள். பிரிட்டிஷார் 1948-ம் வருஷம் ஜூன் மாதம் இந்தியாவுக்குக் கையைக் கழுவி விட்டுப் போய்விடப் போகிறார்கள். இந்த ஒரு வருஷத்திற்குள் நமது அருமை தேசத் தலைவர்கள் எத்தனை எத்தனையோ சங்கடங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. நாலாபுறமும் நெருக்கடிகளும் சுதந்திரத்துக்கு இடையூறுகளும் நமது தலைவர்களைச் சூழ்ந்திருக்கின்றன. பாகிஸ்தான் போராட்டமும் அதன் காரணமாக நடந்து வரும் பயங்கர சம்பவங்களும் தேசத்தின் சுதந்திரத்துக்கே பெரிய இடையூறாகக் கூடும். "பிரிட்டிஷார் இந்தியாவை விட்டுப் போனால் இந்தியாவில் ஒரு சிறிதும் அமைதியிராது. உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டுத் தேசம் சின்னா பின்னமாகும்!" என்று சொன்னவர்களின் கட்சி நிரூபணமாகி விடுமோ என்று பயப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் இந்தியப் பத்திரிகைகளின் கடமை என்ன என்பது கேள்வி.

தேசிய சர்க்காருக்குக் கூடிய வரையில் ஒத்தாசையாயிருந்து ஒத்துழைப்பதே பத்திரிகைகளின் கடமையென்றும், பத்திரிகைகளின் சுதந்திரத்தை வற்புறுத்தவும் சண்டை பிடிக்கவும் இது காலமில்லை என்றும் பல தேசியப் பத்திரிகாசிரியர்கள் கருதுகிறார்கள். பொறுப்பு உணர்ச்சி மிகுதியும் வாய்ந்த இந்த ஒத்துழைப்புக் கோஷ்டிக்குத் தலைவர் "பம்பாய்க் கிரானிகல்" பத்திரிகாசிரியரான ஸ்ரீ எஸ். ஏ. பிரெல்வி என்று சொல்லலாம். இவர் ஒரு தலை சிறந்த தேசிய முஸ்லிம். ஆனால் தோற்றத்தைப் பார்த்து இவர் இஸ்லாம் மதத்தினர் என்று கண்டு பிடிக்க முடியாது. தூய வெள்ளைக் கதர் உடையும் வெள்ளை காந்தி குல்லாவும் தரித்து, சுத்தமாக முக க்ஷவரம் செய்து கொண்டு, பண்பாட்டில் சிறந்த குஜராத்தி ஹிந்துவைப் போலத் தோற்ற மளிக்கிறார். அவருடைய முகத்தில் எப்போதும் ஓர் அபூர்வமான சாந்தமும் விரோதிகளையும் வசப்படுத்தக் கூடிய புன்னகையும் குடிகொண்டிருக்கின்றன. சென்ற நாலைந்து வருஷ காலமாக நடந்து வந்த காங்கிரஸ் திட்டம் சம்பந்தமான வாதங்களில் ராஜாஜியையும் அவருடைய கட்சியையும் இடைவிடாமல் ஆதரித்து வந்த வடநாட்டுப் பத்திரிகை "பம்பாய்க் கிரானிகல்" என்பது நேயர்களில் பலருக்குத் தெரிந்திருக்கலாம். ராஜாஜியை நாலணா காங்கிரஸ் அங்கத்தினராகக் கூடச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று ஆந்திர மாகாணக் காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் செய்தபோது, அதைப் "பம்பாய்க் கிரானிகல்" வெகு அழுத்தமாகக் கண்டனம் செய்ததும் பலருக்கு நினைவிருக்கும்.

பத்திரிகாசிரியர் மகாநாட்டின் ஸ்டாண்டிங் கமிட்டி தேர்தலில் எல்லோரையும் விட இவருக்குத்தான் இந்த வருஷம் அதிகமான வோட்டுக்கள் கிடைத்தன. இதி

லிருந்து ஸ்ரீ பிரெல்வி தமது சகோதர பத்திரிகாசிரியர்களின் மதிப்பையும் அன்பையும் எவ்வளவு தூரம் கவர்ந்திருக்கிறார் என்பதை அறியலாம்.

• • •

பத்திரிகாசிரியர் மகாநாட்டில் இரண்டு நாளைக்கு மேல் விவாதிக்கப்பட்ட அபிப்பிராய பேதத்துக்கு இடமாயிருந்த தீர்மானத்தை ஸ்ரீ எஸ். ஏ. பிரெல்வி பிரேரேபணை செய்தார்.

அந்தத் தீர்மானம், ஹிந்து முஸ்லிம் கலவரங்கள் சம்பந்தமான செய்திகளைப் பிரசுரிப்பது பற்றியது. மேற்படி செய்திகளைப் பத்திரிகைகளில் பிரசுரிக்கும்போது கொல்லப்பட்டவர்கள் இவ்வளவு பேர் என்ற புள்ளி விவரங்களில் சமூகத்தைக் குறிப்பிடுவதில்லை என்ற சம்பிரதாயம் பெரும்பாலும் அநுஷ்டிக்கப் பட்டு வருகிறது. மாகாண அரசாங்கங்களும், மிகப் பெரும்பாலான பத்திரிகைகளும், செய்தி ஸ்தாபனங்களும் மேற்படி கொள்கையை அநுஷ்டித்து வருகின்றன.

இப்படியாக ஹிந்து முஸ்லிம் கலவரம் சம்பந்தமான செய்திகளில் சமூகத்தைக் குறிப்பிட வேண்டுமா வேண்டாமா, அதனால் நன்மையா தீமையா என்பது பற்றித்தான் மகாநாட்டில் விவாதம் நடந்தது.

“சமூகத்தைக் குறிப்பிடாம லிருப்பது தான் நல்லது; அதனால் கலகம் மற்ற இடங்களில் பரவாமல் இருப்பதற்கு ஓரளவு உதவி ஏற்படுகிறது” என்று பெரும்பாலான பத்திரிகாசிரியர்கள் கருதினார்கள். “இந்தக் கட்டுப்பாடு அர்த்தமற்றது; அதனால் உபயோகமில்லை; கெடுதலும் உண்டு; உண்மையை மறைப்பதாகும்; பத்திரிகைகளின் சுதந்திரத்துக்குப் பங்கம்” என்றெல்லாம் தீவிரமாக ஒரு கோஷ்டியார் எதிர்த்தார்கள்.

எதிர்த்தவர்களில் மிகப் பிரபலமான பத்திரிகாசிரியர் ஸ்ரீ எஸ். ஸதானந்தர். பத்திரிகை உலகத்தில் ஸ்ரீ ஸதானந்தர் எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடிப்பது போன்ற பிரம்மாண்டமான முயற்சிகளைச் செய்திருக்கிறார். அவ்வளவு பெரிய கஷ்ட நஷ்டங்களை அநுபவித்திருக்கிறார். அத்தனை மகத்தான வெற்றிகளையும் கண்டிருக்கிறார்.

ஸ்ரீ ஸதானந்தர் தமிழ் நாட்டவர் என்பது நேயர்கள் பலருக்குத் தெரிந்திருக்கும். தமிழ் நாட்டில் முதல் முதலாக “விவேக சிந்தாமணி” என்னும் மாத சஞ்சிகையை ஆரம்பித்து, கமலாம்பாள் சரித்திரம் என்னும் தொடர் கதையை அதில் பிரசுரித்து, தமிழ் இலக்கிய உலகில் அழியாத புகழை ஸ்தாபித்த ஸ்ரீ சி. வி. சுவாமிநாதய்யரின் குமாரர் ஸ்ரீ ஸதானந்தர்.

இருபது வருஷத்துக்கு முன்னால் இந்தியாவின் பத்திரிகைகளில் பிரசுரமாகும் செய்திகள் எல்லாம் ராய்ட்டர்-அஸோஸியேடட் பிரஸ் செய்திகளாகவே இருக்கும். ‘ராய்ட்டர்’ அசல் பிரிட்டிஷ் ஸ்தாபனம். அஸோஸியேடட் பிரஸ் ராய்ட்டரோடு இணைக்கப் பெற்றிருந்தது. தேசிய இயக்கத்துக்குப் பாதகமாகவும் அதிகார வர்க்கத்துக்கு அநுகூலமாகவுமே மேற்படி ஸ்தாபனங்களின் செய்திகள் இருக்கும். அதற்குப் பிரதியாக இந்திய சர்க்காரின் பூரண ஆதரவையும் பக்க பலத்தையும் மேற்படி ஸ்தாபனங்கள் பெற்றிருந்தன. *

அத்தகைய பலம் படைத்த ஸ்தாபனங்களுக்குப் போட்டியாக “ப்ரீ பிரஸ்” என்னும் செய்தி ஸ்தாபனத்தை ஸ்ரீ ஸதானந்தர் ஆரம்பித்தார். உண்மையைச் சொல்லுவது என்று ஒருவன் கிளம்பினால் அவனுக்கு எத்தனை இடுக்கண்களும் இடையூறுகளும் சம்பவிக்கும் என்பது நாள்தோறும் நாம் பார்ப்பது தானே? அதிலும் பிரிட்டிஷ் சர்க்காருக்கு விரோதமான உண்மைகளைச் சொல்வது, அதற்காகவே ஒரு செய்தி ஸ்தாபனத்தையும் ஆரம்



குமாரி லலிதா : குமாரி பத்மா

* பின்னால், ராய்ட்டரோடு அஸோஸியேடட் பிரஸ் ஐக்கியமாகி விட்டது. நிர்வாகத்தின் இயல்பும் செய்திகளின் தோரணையும் இப்போது நல்ல முறையில் மாறியிருக்கின்றன. தற்சமயம் தலைமை நிர்வாகப் பொறுப்பு வகிப்பவர் ஸ்ரீ ஏ. எஸ். பரதன் என்னும் தமிழர்தான்.



ஸ்ரீ சின்ன அண்ணாமலை

பிப்பது என்றால், அந்த ஸ்தாபனத்தை நடத்துவதில் எத்தனை அபாயங்கள் ஏற்படும் என்று சொல்ல வேண்டியதில்லை. வியாபார முறையிலோ, எத்தனையோ வருஷ காலமாக வேரூன்றிப் பலம் பெற்று வளர்ந்திருந்த ராய்ட்டர் ஸ்தாபனத்துடன் ஸ்ரீ ஸதானந்தர் போராடவேண்டியிருந்தது.

இந்த நிலைமையில் மகாத்மா காந்தி உப்புச் சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்தார். மகத்தான டாண்டி யாத்திரையை மகாத்மா தொடங்கியபோது அதைப் பற்றிய செய்திகளை பம்பாய் வாசிகளுக்கு அவ்வப்போது தெரிவிப்பதற்காக "ப்ரீ பிரஸ் ஜர்னல்" என்னும் சைக்ளோஸ்டைல் பத்திரிகையை ஸ்ரீ சதானந்தர் தொடங்கினார். சீக்கிரத்திலேயே அது அச்சுப் பத்திரிகையாகி அபரிமிதமான வளர்ச்சியும் செல்வாக்கும் அடைந்தது. ஐயாயிரம், பத்தாயிரம், இருபதினாயிரம் ரூபாய் வரையில் பம்பாய் சர்க்கார் மேற்படி பத்திரிகையிடம் ஜாமீன் கேட்டார்கள்; பறிமுதலும் செய்தார்கள். அதற்கெல்லாம் "ப்ரீ பிரஸ் ஜர்னல்" என்னும் ராட்சதக் குழந்தை அசைந்து கொடுக்கவில்லை! மேலும் மேலும் வளர்ச்சியடைந்து இன்று பம்பாய் மாகாணத்தில் தலை சிறந்த செல்வாக்குள்ள பத்திரிகையாக விளங்குகிறது.

'மணிக்கொடி' ஸ்ரீ கே. சீனிவாசன் அவர்களுடைய எழுத்துத் திறமையும், அரசியல் பிரச்னைகளைக் கதைகளின் ரூபத்தில் விளக்கும் அதிசய ஆற்றலும் முதன் முதலில் 'ப்ரீ பிரஸ் ஜர்னல்' மூலமாகத்தான் பிரசித்தி யடைந்தது. தற்சமயம் சென்னையில் "ப்ரீ பிரஸ்" "பாரத தேவி" பத்திரிகைகளை நடத்தும் ஸ்ரீ எஸ். வி. சுவாமியும், ஸ்ரீ சதானந்தர் அவர்களிடம் பத்திரிகை நிர்வாகத்தில் பயிற்சி பெற்றவர்தான்.

வாழ்நாளெல்லாம் அதிகார வர்க்கத்தின் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிவதற்காகவே போராடி வந்தவரான ஸ்ரீ ஸதானந்தருக்கு இப்போதும் கட்டுப்பாடு என்றால் கட்டோடு பிடிக்கவில்லை. எனவே பெரும்பான்மை ஆசிரியர்களின் கட்சியைப் பலமாக எதிர்த்தார். "சிப்பை ஒளித்தால், கலியாணம் நின்று விடுமா? கோழி கூவாவிட்டால் சூரியன் உதயமாகாதா? பத்திரிகைகளில் சமூகத்தைக் குறிப்பிடாவிட்டால், கலகம் நடக்காமல் நின்று விடுமா? எங்கேயாவது நின்றிருக்கிறதா? உண்மையைச் சொல்வதற்குக் கட்டுப்பாடு என்ன? பயம் என்ன? உண்மையை மறைப்பதினால் பிரயோஜனம் என்ன? பத்திரிகைகளின் செல்வாக்குக் குறைந்து போவது ஒன்றுதான் கண்ட பலன்!" என்று இந்த ரீதியில் காரசாரமாகவும் ஆவேசமாகவும் ஸ்ரீ சதானந்தர் பேசினார். பெரும்பான்மைக் கட்சித் தலைவர்கள் அவரைச் சமாதானப் படுத்தி எதிர்ப்பை வாபஸ் பெற்றுக் கொள்ளும்படி செய்ய எவ்வளவோ முயன்றும் பிரயோசனப் படவில்லை. ஒரு தடவை ஸ்ரீ சதானந்தர், "பத்திரிகைகள் எவ்வளவு எழுதியும் கலகம் நிற்காமல் நடந்து கொண்டிருப்பது நமக்கெல்லாம் பெரிய அவமானம். பத்திரிகைகளின் செல்வாக்குக்கு அது பங்கம். ஒன்று கலகம் அடியோடு நிற்கட்டும்; இல்லை, கலகம் நடந்துதான் தீரும் என்றால், பத்திரிகைகளின் தயவிலே அது நடக்கட்டும்!" என்று ஒரு பெரிய போடு போட்டார்! அது அங்கே கூடியிருந்த எல்லோரையுமே தூக்கிவாரிப் போட்டது!

ஸ்ரீ சதானந்தரைப் பலமாக ஆதரித்து நின்றவர்களில் மூன்று பேரை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். நாகபுரியில் வெளியாகும் "ஹிதவாதா" பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ ஏ. டி. மணி ஒருவர். "ஹிதவாதா" என்றதும், சப்த ஒற்றுமையை முன்னிட்டு அது ஒரு மிதவாதப் பத்திரிகையோ என்று நேயர்கள் நினைக்கலாம். அப்படியொன்றும் இல்லை.

பத்திரிகை எப்படியாவது இருக்கட்டும்; அதன் ஆசிரியர் ஏ. டி. மணியின் பேச்சில் மிதவாதம் என்பது அணுவளவும் கிடையாது. வெட்டு ஒன்றும் துண்டு இரண்டும் தான்! இவருடைய பேச்சுக்களும் கேள்விகளும் குறுக்குக் கேள்விகளும் பெரும்பான்மை கோஷ்டித் தலைவர்களுக்கு ஓயாத

தலை வலியை உண்டாக்கிக் கொண்டிருந்தன! "இந்த மணிச் சத்தம் எப்போது ஓயும்?" என்று பல பெரிய பத்திரிகாசிரியர்கள் முணுமுணுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஸ்ரீ சதானந்தரை ஆதரித்தவர்களில் இன்னும் இருவர் மகாராஷ்டிர பத்திரிகாசிரியர்கள். ஒருவர் "லோக மான்யா"வின் ஆசிரியர் காட்கில், இன்னொருவர் லோகமான்ய திலகரால் ஆரம்பிக்கப்பட்ட "கேஸரி" பத்திரிகாசிரியர் ஸ்ரீ டி. வி. கோகலே.

வயதிலும் அநுபவத்திலும் முதிர்ந்தவர் ஸ்ரீ கோகலே. வாதத் திறமை மிகுந்தவர். ஸ்ரீ காட்கில் இளம் வயதினர். சரீரம் கம்மல். ஆனால் பிடிவாதம் அதிகம். விவாதத்தில் விட்டுக் கொடுக்க மாட்டார். ஸ்ரீ ஏ. டி. மணிக்கு அடுத்தபடியாக ஸ்ரீ காட்கில்தான் பெரிய பத்திரிகாசிரியர்களுக்கு அதிக தலைவலியை உண்டாக்கினார்.

அவர் பேசும்போதெல்லாம், "அடாடா! நமது காலஞ்சென்ற ஸ்ரீ நாகேச்வர ராவ் காரு இப்போது இல்லாமற் போனாரே? இருந்திருந்தால் பத்திரிகாசிரியர் ஒவ்வொருவருக்கும் ஒரு 'அமிர்தாஞ்சனம்' புட்டியாவது கொடுத்திருப்பாரே?" என்று ஒரு பத்திரிகாசிரியர் முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

ஸ்ரீ காட்கில் கூறிய ஒருவாதம் ரொம்பவும் சக்தி வாய்ந்ததாகக் காணப்பட்டது. "தாக்கும் சமூகம் இன்னதென்று குறிப்பிடாமல் கலகச் செய்திகளைக் குறிப்பிடுவதால் பத்திரிகாசிரியர்கள் கொலைக் குற்றத்துக்கு உள்ளாகிறார்கள்!" என்று சொல்லி, அவர் எல்லாரையும் பயங்கரத்திற்கு உள்ளாக்கினார். "சாதாரண ஜனங்கள் தங்கள் தொழிலை நடத்துவதற்காகப் பல இடங்களுக்கும் போக வேண்டியிருக்கிறது. ஒரு இடத்தில் கலகம் நடக்கும் போது இன்ன சமூகம் இன்ன சமூகத்தைத் தாக்குகிறது என்று தெரிந்தால் சாதாரண ஜனங்கள் எச்சரிக்கையடைந்து அங்கங்கே போகாமல் இருப்பார்கள். அந்த விவரம் தெரியாவிடில் ஜாக்கிரதையில்லாமல் சென்று செத்துப் போவார்கள்!" என்று சொன்னார்.



குமாரி ஹேமமாலினி

ஆனால், மகாநாட்டில் பெரும்பான்மையோர் "சமூகத்தின் பெயர் குறிப்பிடாமலிருப்பதுதான் நல்லது" என்று கருதினார்கள்.

இப்படிக் கருதியவர்களில் பம்பாய்ப் பத்திரிகை முதலாளியான ஸ்ரீ அமிர்தலால் சேத் ஒருவர். "வந்தே மாதரம்" என்னும் பிரபல குஜராத்தி பத்திரிகையின் ஆசிரியர். ஸ்ரீ காட்கிலை ஆசிரியராகக் கொண்ட "லோகமான்யா" பத்திரிகையின் சொந்தக்காரரும் இவர்தான். ஸ்ரீ காட்கில் பேசி முடித்தவுடனே ஸ்ரீ அமிர்தலால் சேத் மேடைமீது ஏறி அழுத்தந் திருத்தமாகப் பேசினார். ஸ்ரீ காட்கிலின் வாதங்களையெல்லாம் தவிடு பொடியாக்கிவிட்டார்! பத்திரிகை ஆசிரியரும் பத்திரிகைச் சொந்தக்காரரும் வெவ்வேறு கட்சி பேசியது மகாநாட்டில் ஒரு பெரிய தமாஷாயிருந்தது.

* * *

எதிர்ப்புக் கோஷ்டியார் எவ்வளவுதான் தீவிரமாக எதிர்த்தும் பெரும்பான்மையார் அசைந்து கொடுக்கவில்லை. எதிர்ப்புக்காரர்களுக்கெல்லாம் பதில் சொல்லிய ஸ்ரீ ஜெ. என். ஸானி ஒரு ரஸமான விவரத்தை வெளியிட்டார். சமூகங்களின் பெயர்களை வெளியிடாமலிருப்பதால் சமூகத் துவேஷத்தை வளர்ப்பதையே தொழிலாகக்கொண்ட சில பத்திரிகைகள் சில சமயம் திண்டாட்டத்திற்கு உள்ளாகின்றன என்று அவர் சொல்லி, ஒரு உதாரணமும் கூறினார். அமிருதசரஸ் நகரில் கலகம் நடந்தபோது அந்நகரில் முக்கியமான பகுதிகள் நெருப்புக்கு இரையாகின என்ற செய்தி வந்ததல்லவா? இந்தச் செய்தி வந்தவுடனே "டான்" என்னும் பத்திரிகை பெரிய தலைப்புகளைக் கொடுத்துக் குதூகலமாகப் பிரசுரித்து வந்ததாம். எரிந்த பகுதிகள் ஹிந்து சிக்கியரின் வாசஸ்தலங்கள் என்று எண்ணி அப்படிப் பிரசுரித்ததாம். நாலு நாளைக்குப் பிறகு எரிந்தவை பெரும்பாலும் முஸ்லிம்களின் வீடுகள் என்று தெரிந்ததும், ஒரே அடியாகத் துக்கம் கொண்டாடியதாம்!

மொத்தத்தில் கலக வெறி வேகமாகப் பரவாமல் தடுப்பதற்குச் சமூகப் பெயர்

களைக் குறிப்பிடாமல் இருப்பது உதவி செய்யும் என்று பத்திரிகாசிரியர்கள் பலர் கருதினார்கள். எனினும் எதிர்ப்புப் பலமாயிருந்ததை முன்னிட்டு ஒரளவு சமரசத்திற்கு இணங்கினார்கள். "பத்திரிகாசிரியர் மகாநாட்டின் ஸ்டாண்டிங் நிரந்தரக் கமிட்டியார் அவ்வப்போதுள்ள நிலைமைக்குத் தகுந்தபடி இந்த விஷயத்தில் பத்திரிகைகளுக்கு யோசனை சொல்லி வழி காட்ட வேண்டும்" என்ற சமரசத் தீர்மானம் முடிவாக நிறைவேறியது.

* * *

பத்திரிகாசிரியர் மகாநாட்டைக் குறித்தும், மகாநாட்டிற்கு வந்திருந்த பல பிரபல பத்திரிகாசிரியர்களைக் குறித்தும் இன்னும் எவ்வளவோ எழுதலாம். ஆனால் சென்ற இதழில் பெயர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை முன்னிட்டு இந்த இதழிலேயே முடித்துவிட விரும்புகிறேன். முடிப்பதற்கு முன்னால் இரண்டொரு விஷயங்களை அவசியம் குறிப்பிட வேண்டும்.

வரவேற்புக் கமிட்டித் தலைவர் மிஸ்டர் ஹெப்ல்ஸாம், காரியதரிசிகளான ஸ்ரீ எஸ். வி. சுவாமி, ஸ்ரீ மணியன் நடேசன் ஆகியவர்களும், "ஹிந்து" பத்திரிகாசிரியரின் காரியதரிசி ஸ்ரீ நாராயணன் அவர்களும் பெரிதும் சிரமப்பட்டு உழைத்து மகாநாட்டைச் சிறப்பாக நடத்தி வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள்.

முக்கியமாக, மகாநாட்டுக்காகப் பல பல மாகாணங்களிலிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகளுக்கு ஸ்ரீ மணியன் நடேசன் ஏற்படுத்தியிருந்த நடனவிருந்தைக் குறிப்பிடவேண்டும். திருவனந்தபுரத்தைச்சேர்ந்த குமாரி லலிதா, குமாரி பத்மா என்னும் பெண்கள் கதகளி, பரதநாட்டியம் ஆகிய இரண்டு முறைகளையும் சேர்த்து அமைத்த நடன விருந்தை மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு அளித்து மகிழ்வித்தார்கள்.

* * *

கடைசியாக மகாநாட்டின் தலைவர் ஸ்ரீ தேவதாஸ் காந்தி அவர்களுக்குக் "கல்கி" காரியாலயத்தாரால் அளிக்கப்பட்ட விருந்தைப் பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த விருந்துக்கு ஸ்ரீ தேவதாஸ் காந்தி அவர்களுடன் ஸ்ரீ என். ஏ. பிரெல்வி, ஸ்ரீ ஜே. என். ஸானி, ஸ்ரீ தேசபந்து குப்தா, ஸ்ரீ ஸதானந்தர், ஸ்ரீ ஸ்டாலின் ஸ்ரீனிவாஸன், ஸ்ரீ ஜோச்சிம் ஆல்வா, ஸ்ரீ ஏ. டி. மணி ஆகிய வட நாட்டுப் பத்திரிகாசிரியர்களும், ஸ்ரீ கஸ்தூரி ஸ்ரீனிவாசன், ஸ்ரீ சி. ஆர். சீனிவாசன், ஸ்ரீ ஏ. என். சிவராமன், ஸ்ரீ ஏ. ஜி. வெங்கடாச்சாரியார், ஸ்ரீ என். வி. சுவாமி, ஸ்ரீ சம்பு பிரஸாத், ஸ்ரீ என். கே. அய்யர் ஆகிய சென்னைப் பத்திரிகாசிரியர்களும், ஆசிரியர் வ. ரா., இந்திய அரசாங்கச் செய்தி ஸ்தாபனத் தலைவர் ஸ்ரீ ஏ. எஸ். ஐயங்கார், சென்னைச் செய்தி இலாகாத் தலைவர் ஸ்ரீ ஹனுமந்தராவ் ஆகியவர்களும், ராய்ட்டர் ஸ்தாபனத் தலைவர் ஸ்ரீ ஏ. எஸ். பரதன், ஸ்ரீ எஸ். எஸ். சுந்தரம் (யுனைடட்பிரஸ்) அவர்களும், சென்னை ஷெரிப் ஸ்ரீ ராமசாமி நாயுடு அவர்களும், பிரதம மந்திரி ஸ்ரீ ரெட்டியார், உணவு மந்திரி டாக்டர் ராஜன், மதுரை ஸ்ரீ வைத்திநாதய்யர், ஸ்ரீ பெருமாள்சாமி செட்டியார் ஆகிய பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தார்கள். இவர்களுக்கெல்லாம் "கல்கி" காரியாலயத்தாரின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முப்பது பேருக்கு மேல் விருந்து அளிக்கக் கூடாது என்ற விதி காரணமாக மற்றும் பல நண்பர்களை அழைக்க முடியாமற் போனது பற்றி "கல்கி" காரியாலயத்தாரின் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விருந்துக்கு முன்னால் தமிழ்ப்பண்ணை ஸ்ரீ அண்ணாமலை ஒரு ஹாஸ்ய விருந்தை அளித்தார். பலவித முகபாவங்களைக் காட்டியும், பழைய காலத்து நாடக தோரணையை அனுசரித்துச் சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் ஒரு கட்டத்தை நடித்துக் காட்டியும், "நான் ராமசாமி", "நான் லச்சுத்துமனன்" "நான் சீதைப் பொண்ணு" என்று சொல்லிக் கொண்டு நாடகபாத்திரங்கள் மேடைக்கு வரும் ஒயிலாட்டம் ஆடிக் காட்டியும், விருந்தினரை நகைப்புக் கடலில் மூழ்கச் செய்தார்.

விருந்துக்குப் பிறகு ஸ்ரீ விஜயராகவன் ஐ. சி. எஸ். அவர்களின் புதல்வி குமாரி ஹேமா மாலினி பரத நாட்டியத்தில் ஒரு பகுதியைச் சிறப்பாக ஆடி, விஜயம் செய்திருந்த பிரமுகர்களுக்குப் பரத நாட்டியக் கலையின் மேன்மை விளங்கும்படி செய்தார்.

தமிழ்ப்பண்ணை ஸ்ரீ சின்ன அண்ணாமலைக்கும், குமாரி ஹேமா மாலினிக்கும் "கல்கி" காரியாலயத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


என்னே அவளது எழில்!
அவள் பாண்ட்ஸ் உபயோகிக்கிறாள்!
*குஸுமா கோமள வதனி... அழகு சிங்காரி...
....உங்கள் சருமத்திற்கு நீங்கள் விரும்புவது இயற்கைத் தைலங்கள்தான் இல்லையா? வதனத்தை மாசற்ற புதுமை காந்தியுடன் விளங்கச் செய்ய, நறுமணங்கமழும் மிருதுவான பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமையும் வானிஷிங் க்ரீமையும் பரீட்சியுங்கள்—எங்குமே, கவர்ச்சி வாய்ந்த கன்னிகையர்கள் பாண்ட்ஸையே உபயோகிக்கின்றனர்.
பாண்ட்ஸ்
PONDS
பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம்: தினம் இரண்டு வேளை விரல் நுனிகளால் கோல்ட் க்ரீம் மெதுவாகத் தடவி, முகத்தை செம்மையாகச் சுத்தம் செய்யுங்கள். பாண்ட்ஸ் டிஷ்யூவால் துடைத்துக் கொள்ளவும்.
PONDS
பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்: பின்பு வானிஷிங் க்ரீம் தடவுங்கள். அது சருமத்தினுள் மறைகிறது—சருமத்திற்கு பாதுகாப்பு அளிக்கிறது.
பாண்ட்ஸ் பௌடர்: பின்னர் வேண்டியோருக்கு கொஞ்சம் பௌடரும் தடவிக் கொள்ளுங்கள். முகம் ... காந்தியுடன் விளங்கும்.
பாண்ட்ஸ் க்ரீம்ஸ்
வியாபார விவரங்களுக்கு:
எல். டி. ஸெய்மூர் & கோ. (இந்தியா) லிட். பம்பாய்-கல்கத்தா-கராச்சி-சென்னை.

லக்ஷ்மியின் கடிதம்

சனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கெல்லாம் காரியாலயத்தை விட்டு வீட்டுக்கு வரும்பொழுது மணி இரண்டரை ஆகிவிட்டது. வீடு பூட்டியிருந்தது. அப்பொழுதுதான் ராஜம் சினிமாவுக்குப் போயிருந்தது ஞாபகம் வந்தது. அடுத்த வீட்டுப் பையனைக் கேட்டுச் சாவியை வாங்கிக் கதவைத் திறந்து உடுப்பைக் களைந்து விட்டு நாற்காலியில் உட்கார்ந்தேன்.

எதிரே மேஜையின்மேல் முதல்தரமான காப்பி கொதித்துக் கொண்டிருந்தது. இது சகஜம்தான். ராஜம் எங்கேயாவது வெளியே போவதாக இருந்தால் அன்றைய தினம் காப்பி என்றுமில்லாதபடி அருமையாக இருக்கும்!

காப்பியைக் குடித்து விட்டு எழுத உட்கார்ந்தேன், ''நான் மத்தியானம் அடுத்தாத்து அம்மாமியுடன் சினிமாவுக்குப் போகப் போகிறேன். உங்களுக்குக் காப்பி போட்டு 'பிளாஸ்'கில் வைத்து விட்டுப் போகிறேன். நிம்மதியாக உட்கார்ந்து இன்றைய தினம் கண்டிப்பாக நீங்கள் கதை எழுதி முடிக்கவேண்டும். நான் இருந்தால் தானே தொந்தரவு, எழுத முடியவில்லை என்று நொண்டிச் சாக்கு!'' என்று காலையிலேயே அவள் கொஞ்சலும் கோபமுமாகச் சொன்னது ஞாபகம் வந்தது.

எழுத உட்கார்ந்தேன். ஏதோ எழுதி எழுதிக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டேன். என் ஞாபகம் முழுவதும் ராஜத்தின்மேல் இருந்தது.

வாஸ்தவம்; அவள் என்னுடன் இருந்தால் என்ன காரணத்தாலோ எழுத முடியவில்லை. அவள் இல்லாது போனால்......? இந்தப் பாழும் கற்பனை அவளையல்லவா தொடர்ந்து ஓடுகிறது!

இந்தச் சமயத்தில், ''மாமா, கடிதாசி வந்திருக்கு, உங்களுக்கு!'' என்று வாசலில் குரல் கேட்டது.

எழுந்து போய் அந்தக் கடிதத்தை வாங்கிப் பிரித்துப் பார்த்தேன்.

முத்து முத்தான எழுத்தில் கோவையாகப் பதினைந்து தாள்கள். ராஜத்துக்கு அவள் தோழி லக்ஷ்மி எழுதியிருந்தாள்.

பிரித்துப் பார்த்தது குற்றம்தான். ஆனால் அதைப் படிக்க வேண்டும் என்கிற ஆவலை மட்டும் என்னால் அடக்க முடியவில்லை. பதினைந்து பக்கங்கள் சலிப்பில்லாமல் ஒரு பெண்

ப.ராமமூர்த்தி



தன் சிநேகிதிக்கு எழுத வேண்டும் என்றால், அதில் ஏதோ தனிப்பட்ட சுவாரஸ்யம் இருக்கவேண்டுமல்லவா?

ராஜம் வந்தால் தன் கடிதத்தை நான் பார்த்து விட்டேனே என்று கடிந்து கொள்ளுவாள். அந்தக் கடிதத்தில் புருஷர்களுக்குத் தெரிவிக்கக் கூடாத உட்பொருள் ஏதாவது இருக்குமானால் அவள் முகம் வெட்கத்தால் சிவக்கும். அப்பொழுது அவளுடைய இயற்கை அழகு இன்னும் பரிபூரணமடையும். பிறகு.........?

"சரி, என்னதான் எழுதியிருக்கிறது என்பதைப் பார்ப்போமே!" என்று எண்ணியவனாய்க் கடிதத்தை முழுக்க முழுக்கப் படித்துப் பார்த்தேன்.

நான் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. கடிதம் ரொம்ப ரொம்ப சுவாரஸ்யமாகத்தான் இருந்தது. "கெட்டிக்காரப் பெண்! அவளைக் கல்யாணம் செய்து கொண்டவன் மிகவும் அதிர்ஷ்டசாலிதான். ஆனால் பாவம், அவள் தலையெழுத்து அவளை மூன்றாவது மனைவியாக்கி விட்டது!" என்று நான் லக்ஷ்மியின்மேல் பச்சாத்தாபப் பட்டேன்.

கடிதத்தை ராஜம் வந்தால் கொடுத்து விடலாம் என்று மடித்து வைத்து விட்டு, மறுபடியும் எழுத ஆரம்பித்தேன். பாழும் மனம் புதுக் கதை புனைய மறுத்து விட்டது. மறுபடியும் அந்தக் கடிதத்தையே சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அப்புறம் எழுதலாம் என்று சாய்வு நாற்காலியில் சாய்ந்து கண்ணயர்ந்தேன்.

அதற்குள் ராஜம் வந்து என்னைத் தட்டி எழுப்பினாள்.

"நன்றாயிருக்கு. நீங்கள் கதை எழுதுகிற லட்சணம்! வாசற் கதவைத் திறந்து போட்டு விட்டுக் கும்பகர்ணன் மாதிரி தூங்குகிறீர்களே!" என்றாள் அவள்.

நான் மெதுவாக எழுந்து, "ராஜீ! உனக்குக் கடிதாசி வந்திருக்கே, பார்த்தாயோ?" என்றேன்.

"எதோ, இப்படிக் கொடுங்கள்!" என்று ஆவலுடன் கேட்டாள்.

நான் கடிதத்தை மெதுவாக எடுத்துக் கொடுத்தேன்.

"யார் பிரித்தது?" என்று அவள் கேட்டாள்.

"யார் பிரிப்பார்கள்? யாருக்குப் பிரிக்க உரிமை யுண்டோ, அவர்கள்!" என்று நான் சொல்லி வைத்தேன்.

... முதற்பரிசுக்கதை ...



நல்ல வேளையாக, அவள் என்மீது கோபித்துக் கொள்ளவில்லை. "கடிதம் இருக்கட்டும்; உங்கள் கதை எங்கே?" என்று கேட்டு என் மானத்தை வாங்கினாள்.

"அந்தக் கடிதத்திலுள்ள நிஜக் கதை, கற்பனைக் கதைகளையெல்லாம் தூக்கியடித்துவிடும் போலிருக்கிறது! படித்துத்தான் பாரேன்!" என்றேன்.

அவள் படிக்க ஆரம்பித்தாள். அந்தக் கடிதந்தான் இது:—

பம்பாய்,
20—8—46

என் உயிருக்கு உயிரான ராஜத்துக்கு, லக்ஷ்மி அன்புடன் எழுதிக் கொண்டது:

உன் கடிதம் கிடைத்தது. நான் என் இரண்டு வருஷங்களாக, நமக்குக் கல்யாணம் ஆனபிறகு, கடிதமே எழுதவில்லை என்று கேட்டிருக்கிறாய். எனக்கு எழுதுவதற்கு என்னடி இருக்கிறது? உன்னைப்போல் சின்னஞ் சிறு இருபது வயது மன்மதனையா நான் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறேன், எழுதுவதற்கு! என் தலை விதிதான் உனக்குத் தெரியுமே! ஏழையாய்ப் பிறந்த பெண், அழகாய் இருந்தால் மட்டும் போதுமா? என் கணவருக்கு நான் மூன்றாம் தாரம். அப்படியிருக்க உனக்கு நான் எதைப் பற்றி எழுத முடியும்? இருந்தாலும், என் மனத்தில் இந்த இரண்டு வருஷங்களாக அடக்கி வைத்திருந்த விஷயங்களை இன்றைய தினம் எழுதி விடுகிறேன். பொறுமையுடன் படித்துவிட்டு உடனே இதைக் கொளுத்தி விடு. நமக்குள் இருக்க வேண்டிய ரகசியம். வேறு யாராவது பார்த்துவிடப் போகிறார்கள்!

போன வருஷம் அவர் சென்னைக்கு வந்து, தனிக் குடித்தனம் நடத்துவதற்காக என்னைப் பம்பாய்க்கு அழைத்துப் போனது உனக்குத் தெரிந்த விஷயம். நல்ல வேளை, என் அதிர்ஷ்டவசமாக அவருக்கு மூத்தாள் குழந்தை எதுவும் இல்லை. எங்கள் இருவருடைய அன்யோன்ய தாம்பத்ய வாழ்க்கையைக் கெடுக்க உயிருள்ள வேறு யாரும் பம்பாயில் இல்லை.

ஆனால் என்னுடைய இன்ப வாழ்க்கையைத் துன்பமென்னும் வலை வீசிப் பிடிக்க என்னுடைய மனமே காரணமாக இருந்தது. என்ன இருந்தாலும் பெண் வர்க்கமாகிய நமக்குப் பல சமயங்களில் நமது மனமும் நாக்குமே வைரியாக வந்து மூளுகின்றன. சமயாலம் கிண்டிவிட்ட சந்தேகப் பேய் மனத்தில் புகுந்து ஆட்டிவிடும்படி நாம் இடம் கொடுத்து விடுகிறோம். புருஷர்களிடம் எவ்வளவு கெட்ட குணங்கள் இருந்தாலும் சில நல்ல குணங்களும் இருக்கத்தான் செய்கின்றன. அந்த நல்ல குணங்கள் கெட்ட குணங்களை வெளிப்படாமலிருக்கவும் உதவுகின்றன. பெண்களாகிய நமக்கு எந்தச் சமயத்திலும் அவர்களுடைய நல்ல குணங்கள் தெரிவதில்லை. தெரிந்தால்கூட பூதக் கண்ணாடியாகிய நமது மனம் அவர்களுடைய கெட்ட குணங்களை ஆயிரம் மடங்கு பெரிதாக்கிப் பார்த்து விடுகிறது. நமது நாக்கு வரம்பில்லாமல் பேசிவிடுகிறது. இதெல்லாம் எதற்காக எழுதுகிறேன் என்று உனக்குப் புரியாது. என் கடிதத்தை முழுவதும் படித்தாயானால் புரிந்துவிடும்.

பம்பாயில் என் புருஷர் வாடகைக்கு வைத்துக் கொண்டிருந்த இரண்டு அறைகள் மிகவும் அழகாய் இருந்தன. பளிங்குக் கல் தரை பளபள வென்று மின்னும் ஒரு சயன அறை; அதை அடுத்

துச் சமையலறை. எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

சம்சாரம் தொடங்க அத்யாவசியமான எல்லாச் சாமான்களையும் அவர் வாங்கி வைத்திருந்தார். கட்டில், மெத்தை, நாற்காலி, மேஜை முதலியவற்றை யெல்லாம் வேலைக்காரன் தட்டி வைத்திருந்தான்.

இவற்றை யெல்லாம் ஒரு சுற்றுப் பார்த்து விட்டு, அவர் ஜீப்பிலிருந்து கொண்டு வந்த சாப்பாட்டைச் சாப்பிட்ட பிறகு ஆயாசம் தீரப் படுத்துக் கொண்டேன்.

அவர் எங்கேயோ வெளியே போய் வருவதற்காக உடை யணிந்துகொண்டு போய் விட்டார்.

நான் படுத்தபடியே தலை நிமிர்ந்து பார்த்தேன். சுவரில் நான் கண்ட காட்சி என் உள்ளத்தை உலுக்கியது. வேறு ஒன்றும் இல்லை; இரண்டு படங்கள். இரண்டும் பெண்களின் படம்.

நான் கட்டிலின்மேல் ஏறி அந்த இரண்டு படங்களையும் கழற்றிப் பார்த்தேன்.

யாருடைய உதவியு மின்றியே அந்த இரண்டு படங்களில் உள்ளவர்களும் யார், யார் என்று எனக்குத் தெரிந்து விட்டது!

ஆமாம், அவர்கள் என் மூத்தாள்கள்!

ஒவ்வொரு படத்தையும் ஐந்து நிமிஷங்கள் ஊன்றிப் பார்த்தேன்.

முதலில் நான் பார்த்த படம் அவருடைய முதல் மனைவியினுடையது என்று நினைத்தேன். உருண்டை முகம்; குறுகுறு வென்று பார்ப்பவரை ஊடுருவும் நீண்ட கண்கள்; ஒழுங்காய்ப் படிந்திருந்த தலை மயிர்; அழகான மூக்கு; சின்னஞ் சிறுத்தவாய். லட்சணமாகக் குடும்ப ஸ்திரீகளுக்கு வேண்டிய அடக்கத்துடன் இருந்தாள். எனக்கு அவளை ரொம்பப் பிடித்திருந்தது.

இரண்டாவது படத்தில் இருந்தவள், அப்பப்பா! அவளைப் பம்பரமாக ஆட்டி வைத்திருக்க வேண்டும். அவளுடைய ஸ்டைலும், உடையும் அப்படியே சினிமாக்காரி மாதிரி இருந்தது.

அவள் பக்கவாட்டில் பார்த்துக் கொண்டிருந்தாள். காதில் நீண்ட லோலாக்கு; சுருட்டை மயிர்; பெரிய கண்கள்; எடுப்பான மூக்கு; முத்துப்போல் பற்கள்; வாயைப் பிளந்து சிரித்த வண்ணம் இருந்தாள். கையில் ஒரு கொத்துப் புஷ்பங்களையும் வைத்துக் கொண்டிருந்தாள்.


நான் சிறிது நேரம் அந்த இரண்டு போட்டோக்களையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தலையணைக்கடியில் மறைத்து வைத்துக் கொண்டேன்.

படுத்தவுடனே தூக்கம் வருகிற சமயம் அதுவல்ல; வேறு. உடம்பு என்னதான் அலுப்படைந்திருந்தாலும் மனத்தில் சந்தேகமும் யோசனையும் தொடர்ந்து வந்தால் தூக்கம் எப்படி வரும்?

என் மனம் அந்த இரண்டு போட்டோக்களைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அவர்கள் இருவரிடமும் என் புருஷர் எப்படிப் பழகி யிருப்பார் என்பதை நினைத்துப் பார்த்தேன். அதன் பலனாக எனக்கு ஆண் வர்க்கத்தினிடமே ஆத்திரமும் வெறுப்பும்தான் ஏற்பட்டன.

அவருக்கு மூத்த மனைவிகள் இரண்டு பேரின் மேல் எத்தனை ஆசை இருந்திருக்கும்? எவ்வளவு கொஞ்சி விளையாடி இருப்பார்? உண்மையான அன்பு யார்மேல் இருந்திருக்கும்? முதல் மனைவியின் பேரிலா, அல்லது இரண்டாவது மனைவியான அந்தப் பகட்டுச் சாகஸக்காரியிடமா? இல்லை, இப்பொழுது வந்திருக்கும் என்மீதிலா?

எனக்கு இந்தக் கேள்விதான் எழுந்தது. அதற்குப் பதில்......? என் மனசுக்குத்



தீர்மானமான எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. யோசிக்க யோசிக்க எனக்குச் சந்தேகமும் துக்கமும்தான் மிஞ்சியது.

ஆம், ஆண்களே மிகவும் சுயநலம் பிடித்தவர்கள். அவர்களுடைய ஆசையெல்லாம் மிருகத்தனமானதுதான். இல்லாவிட்டால் ஒரு மனைவியுடன் இன்ப வாழ்க்கை நடத்தி விட்டு, அவள் இறந்த பிறகு மறுமணம் செய்துகொள்ள அவர்கள் எப்படி ஒப்புவார்கள்? கல்யாணம் பண்ணிக் கொண்டாலே அவர்களுக்குப் புலியின் குணம் வந்துவிடுகிறது. மனித ரத்தத்தை ருசி கண்ட புலி எப்பொழுதும் நாக்கைத் நீட்டிக்கொண்டு மனிதனுக்காகவே அலையுமாம். அதுமாதிரி ஒருதரம் கல்யாணம் செய்து கொண்டவன் பிறகு பிரம்மசாரியாயிருப்பது குதிரைக் கொம்புதான். எப்படியோ ஒன்றுமறியாத நம்போன்ற இளம் பெண்களை ஆசை வார்த்தை காட்டி மோசம் செய்து கழுத்தில் தாலிக் கயிற்றைக் கட்டி அடிமைப் படுத்தி விடுகிறார்கள். பிறகு நமக்கு என்ன சுதந்திரம் இருக்கிறது, வாழ்க்கையில்?

என் புருஷர்! — இப்பொழுது என் புருஷர்தான் இவர். இதற்குமுன் இந்தச் சொந்தம் கொண்டாடி ஏமாந்த பெண்கள் இரண்டு பேர்; நான் மூன்றாவது!

அவர் வந்தால் என்ன சொல்லப் போகிறார்? நாவல்களில் வருவதுபோல் 'என் கண்ணே, முத்தே!' என்று வஞ்சகமாக இச்சகம் பேசுவார். பிறகு 'நீதான் என் உயிர். உன்னைத் தவிர இந்த உலகத்தில் எனக்கு யார் இருக்கிறார்கள்? உன் அன்பே என் இன்பம்' என்று தம் சுயநலத்திக்குத் தூபம் போடுவார்.

இதேமாதிரி பாடம் படித்து நாடகமாடுவது புருஷர்களுக்குப் புதிதல்ல; அது அவர்கள் ரத்தத்திலேயே ஊறியிருக்கிறது. அதுவும் என் புருஷருக்கோ பிறவிக் குணத்துடன் அநுபவமும் சேர்ந்திருக்கிறது. கேட்பானேன்!

இப்படி என் மனம் எண்ணுவதெல்லாம் எண்ணிப் புண்ணாகப் போய்க் கொண்டிருந்தது. அழுகை அடக்க முடியாமல் பீறிட்டுக் கொண்டு வந்தது.

'ஏன் கல்யாணம் பண்ணிக் கொண்டோம்?' என்று ஒரே வெறுப்பாகத் தோன்றியது.

இருக்கட்டும். அவரே வரட்டும். நேரிலேயே கேட்டுவிடுவோம். என்னைப் பற்றி அவர் என்ன நினைக்கிறார்? என்மீது உண்மையான அன்பு அவருக்கு இருக்கிறதா? அல்லது வெறும் பாசாங்கு தானா?—என்பதை அறியவேண்டும் என்ற எண்ணம் தலைதூக்கி விரித்தாடிற்று.

நான் கேட்டால் என்ன பதில் சொல்லப் போகிறார்? அவருக்கு மனப் பாடமான இச்சக வார்த்தைகள் தானே! ஹூம்...... அதை யார் சட்டை செய்யப்போகிறார்கள்? அவருடைய கொஞ்சலுக்கும் கெஞ்சலுக்கும் மசியக் கூடாது. உண்மையில் அவர் யோக்கியராக இருந்தால் ரகசியம் என்று ஏன் எதையும் மறைக்க வேண்டும்? அப்படி மறைத்துப் பூடகமாகப் பேசினால் நானும் உஷாராக இருந்து விடுகிறேன். அல்லாமல் உண்மையைச் சொல்லி, 'நான் உன்னைக் கல்யாணம் செய்து கொண்டது அன்பினால் அல்ல; எனக்குத் தனிமையின் கொடுமையைத் தணிக்க ஒரு பெண் வேண்டியிருந்தது. நீ அகப்பட்டாய்!' என்று அவர் ஒப்புக் கொண்டால், பிறகு என் தலையெழுத்து விட்ட வழி யாகட்டும்.

இப்படித் தீர்மானித்துக் கொண்டு கண்களை இறுக மூடித் தூங்க முயற்சி செய்தேன். கண்களில் தங்கியிருந்த நீர்த் துளிகள் தலையணையில் விழுந்ததுதான் மிச்சம். தூக்கம் ஏன் வருகிறது?

✶

அவர் வந்தார். என்னைத் தட்டி எழுப்பினார்.

"ஏன் கண்கள் சிவந்திருக்கின்றன? அழுதாயா, என்ன?" என்று மிகப் பரிவுடன் கேட்டார்.

"ஒன்றுமில்லை. ரயிலில் வந்தபோது கரித் துண்டு விழுந்துவிட்டது!" என்று மழுப்பினேன்.

அவர் கட்டிலின்மேல் உட்கார்ந்து தலையணைமேல் சாய்ந்தார். பாவம், ஊர் சுற்றி விட்டு வந்த அலுப்பு!

நான் எழுந்து நின்றேன்.

"பரவாயில்லை, உட்காரு! எனக்கு மரியாதை காட்ட வேண்டுமென்றால், கால் வலிக்கச் சதா நின்று கொண்டிருக்க வேண்டும் என்று அர்த்தமில்லை!" என்று சொல்லிச் சிரித்தார்.

எனக்கும் கொஞ்சம் சிரிப்பு வந்தது. நான் மெதுவாக அதை அடக்கிக் கொண்டே, பாபா வென்று சமையல் அறைக்குப் போய்த் தரையில் உட்கார்ந்து

கொண்டேன். ராஜி, நான் என்னைதைச் சொல்வேன்? — அவர் வந்தால் அவரைக் கேட்கவேண்டுமென்று நான் தயார் செய்து வைத்திருந்த கேள்விகளெல்லாம் என் மனத்தில் எங்கேயோ போய் ஒளிந்து கொண்டன! அவரை நேரில் பார்த்ததும் எனக்கு அவருடன் பேசவே தைரியம் வரவில்லை. பெண்களே மிகவும் கோழைகள்!

அவர், 'அழுதாயா என்ன?' என்று கேட்டபோது, அவர் குரலில் தொனித்த அன்பும் ஆசையும் என் உள்ளத்தைச் சுருக்கென்று குத்தின. அவ்வளவு நிதானமாக அவர் கேட்ட கேள்விக்கு எதிர்க் கேள்வி போடுவது எனக்குச் சுலபமாகத் தோன்றவில்லை. என்னையும் அறியாமல் என் இதயம் படபட வென்று அடித்துக் கொண்டது. உதடுகள் துடித்தன. கோபத்தினால் அல்ல; பயத்தினாலும் அல்ல; என் மனத்தில் என்ன உணர்ச்சி ஏற்பட்டதோ அதை அறிய முடியவில்லை.

எங்கே தலையணைக்கு அடியில் இருந்த போட்டோவைப் பார்த்துவிடப் போகிறாரோ என்று எனக்கு அச்சமாகத் தான் இருந்தது.

அவர் எழுந்து வந்தார். "லக்ஷ்மி!" என்று கூப்பிட்டார்.

"ஏன்?" என்று கேட்டேன். என்னுடைய பதில் அவர் காதில் விழுந்ததோ இல்லையோ?

"எழுந்து வா! மார்க்கெட்டுக்குப் போய் ராத்திரி சமையலுக்கு வேண்டிய காய்கறிகள் வாங்கிக் கொண்டு வரலாம். உனக்கும் பல இடங்களைக் காண்பிக்கிறேன்."

"நீங்கள் மட்டும் போய்விட்டு வாருங்கள். நான் எதற்கு?" என்றேன்.

"சும்மா போய் விட்டு வருவோம், வா! உனக்கு அலுப்பாக இருந்தால் வேண்டாம்!" என்றார்.

அதற்குமேல் நான் அவருடன் வாதாட விரும்பவில்லை. அவரைத் தொடர்ந்து மார்க்கெட்டுக்குச் சென்றேன்.

பம்பாயில் காய்கறிகள் விற்கிற அதிசயத்தைப் பார்த்த எனக்கு ஒரே ஆச்சரியமாயிருந்தது. புடலங்காய், பூசணிக்காய், முருங்கைக் காய் இவற்றைக்கூடத் தராசில் நிறுத்துக் கொடுத்தது எனக்கு நூதனமாக இருந்தது.

இதற்குமேல் விசித்திரமான ஒரு சம்பவம் பிறகு நடந்தது. அதைக் கேட்டால் நீ ஸ்தம்பித்துப் போய் விடுவாய். சொல்கிறேன், கேள்.

காய்கறிகளை வாங்கிக் கொண்டு இருவரும் வீடு திரும்பினோம்.

பின்னாலிருந்து யாரோ, "மாப்பிள்ளை, மாப்பிள்ளை!" என்று கூப்பிட்ட குரல் கேட்டது.

"இது என்ன, ஆச்சரியம்! ஒரு வேளை என் தகப்பனார்தான் வந்து விட்டாரோ?" என்று எண்ணி நான் திரும்பிப் பார்த்தேன்.

அவரும் திரும்பிப் பார்த்தார்!

பின்னால் வந்த மனிதரைப் பார்த்ததும் அவர் முகம் வெளிறிட்டு விட்டது.

நான் கண்ட காட்சி என்னை ஒரே உலுக்காக உலுக்கி நாலு முழ உயரம் தூக்கிப் போட்டது. ராஜி, நான் எப்படியடி எழுதுவேன்? அதை நினைத்தாலே என் மனசு கலங்குகிறது; கை எழுத மறுக்கிறது; மனதைத் திடப்படுத்திக் கொண்டு எழுதுகிறேன்.

புதிதாக வந்த அவருக்குச் சுமார் ஐம்பது வயதிருக்கும். அவருக்கு முன்னே ஒரு கூலிக்காரன் ஒரு பெட்டி, படுக்கை, தூக்குக் கூடை இவைகளைச் சுமந்து கொண்டு வந்தான்.

பின்னால் யார் வந்து கொண்டிருந்தது, தெரியுமா?

அவள்! நான் யாருடைய படத்தைச் சில நாழிகைகளுக்கு முன்னால் பார்த்து அவஸ்தைப் பட்டேனோ, அந்தப் பெண்! என் புருஷரின் இரண்டாவது மனைவி! போதாக்குறைக்கு அவள் கையில் சின்னஞ்சிறு கைக் குழந்தை ஒன்று!

நான் மூர்ச்சித்து விழாமல் வீடு வந்து சேர்ந்தது பகவான் புண்ணியம்தான்!

என் தலை சுற்றியது; மனம் மருண்டது; கண்கள் இருண்டன; உலகமே சுழன்றது.

என்னையுமறியாமல் சமையல் அறையில் வந்து படுத்தேன். ஒரே மயக்கமாக இருந்தது, எனக்கு. தூக்கமுமில்லாமல் விழிப்புமில்லாத ஒரு விசித்திர நிலைமையில் நான் கிடந்தேன்.

மறுபடியும் சமாளித்துக் கொண்டு மெதுவாக எழுந்து நின்று சுவரைப் பிடித்தபடியே படுக்கை அறைக்குள் எட்டிப் பார்த்தேன். என் புருஷரைக் காணோம்; அவரை 'மாப்பிள்ளை' என்று அழைத்த அவருடைய மாமனாரையும் காணோம்.

அவள்......?

என் சக்களத்தி—யாரை நான் இறந்து போய் விட்டாள் என்று அறிந்து, எவளுக்காக நான் பச்சாத்தபப் பட்டுக் கொண்டிருந்தேனோ, அவள் சாவதானமாக உட்கார்ந்து, மடியில் தன் குழந்தையைப் படுக்க வைத்துக் கொண்டு, அதைத் தட்டித் தூங்க வைத்துக் கொண்டிருந்தாள்!

எனக்கு அறைக்குள் நுழையப் போதிய தைரியம் இல்லை. அவர்கள் எங்கே போயிருக்கக் கூடும் என்று யோசனை செய்து கொண்டிருந்தேன்.


அவள் என்னைக் கண்டதும், "எண்டி லக்ஷ்மி, இங்கே வா!" என்று எனக்கு வெகு நாள் பழக்கப்பட்டவளைப் போல் அதிகாரத்துடன் கூப்பிட்டாள்.

அவள் குரலைக் கேட்டு எனக்குக் குலை நடுக்கம் கண்டு விட்டது.

மறுபடியும் "வாயேண்டி, இங்கே! என்ன பயம்? நான் என்ன பேயா, பிசாசா? நான் தொலைந்து போய்விட்டேன் என்று சந்தோஷமாகச் சம்சாரம் பண்ண வந்து விட்டாயா?" என்று சொல்லிக்கொண்டே, குழந்தையைத் தரையில் விட்டுவிட்டு என்னை நோக்கிப் பரபரவென்று வந்தாள்.

பயத்தினால் என் தேகம் பூராவும் வெடவெடவென்று நடுங்கிற்று. அதற்குமேல் அவள் என்ன செய்தாள், தெரியுமா?

நேரே என்னிடம் வந்து, "மோசக்காரி! அவருக்கு உயிருடன் நான் இருக்கும் போது, நீ ஒருத்தி எதற்காக வந்து சேர்



தாய்? வெட்கங் கெட்ட சிறுக்கி!" என்று என் கழுத்தைப் பிடித்து நெரித்தாள்.

நான் "ஐயோ, ஐயோ!" என்று கதறி விட்டேன்.

இதற்குள் கதவைத் திறந்து கொண்டு அவர் வந்தார். வந்தவர், அவள் கையைப் பிடித்துத் தள்ளி, அவள்...... அப்பப்பா! எனக்கு எழுதக்கூடக் கை கூசுகிறது. அவளுடைய கழுத்தில் இரண்டு கைகளையும் வைத்து......

நான், "வேண்டாம், வேண்டாம்! அவளை விடுங்கள். என் தலையெழுத்துப்படி நடக்கட்டும்......!" என்று அலறினேன்.

அவர் விடவில்லை; கையை இறுக்கினார். அவளுடைய கண்கள் பயங்கரமாக விழித்தன. தரையில் கிடந்த குழந்தை திடீரென்று 'வீல்' என்று கத்த ஆரம்பித்தது. நான் என் கண்களைக் கைகளால் மூடிக் கொண்டு என்னையும் மறந்து "அட, பாவி!" என்று கத்தினேன்.

★

"லக்ஷ்மி, லக்ஷ்மி!" என்று அவருடைய குரல் கேட்டது. நான் திடுக்கிட்டுப் படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்தேன்.

"ஏன் கத்தினாய்? ஏதாவது கனவு கண்டாயா?" என்று கேட்டார்.

அப்பாடி! எனக்கு உயிர் வந்தது. நான் கண்டது பூராவும் கனவுதான்; நல்ல காலமாக நிஜமில்லை! இருந்தாலும் என் உடம்பு பூராவும் குப்பென்று வியர்த்து விட்டது; கண்ணைக் கசக்கிக் கொண்டேன்.

"என்ன கனவு கண்டாய்? எங்கே, சொல்லு பார்க்கலாம். பயம் என்ன, நான் இருக்கும்போது! இப்போதுதான் வந்தேன், வெளியிலிருந்து!" என்றார்.

பயத்துடன் என்னை வெட்கமும் சூழ்ந்து கொண்டது. எல்லாம் அந்தப் போட்டோவைப் பார்த்ததனால்தான்!

நடந்ததையும், நான் கண்ட கனவையும் அவரிடம் சொல்ல எனக்கு என்ன காரணத்தாலோ தைரியம் வரவில்லை.

"ஒன்றுமில்லை" என்று எழுந்திருந்து போக முயன்றேன்.

அவர் என்னை விடவில்லை; கட்டாயப் படுத்திப் படுக்க வைத்து விட்டார்.

பிறகு தம் சட்டையைக் கழற்றி மாட்டினார். அவர் சட்டையை மாட்டும்பொழுது தலை நிமிர்ந்து சுவரைப் பார்த்தார். எதற்காகப் பார்க்கிறார் என்பது எனக்குப் புரிந்து விட்டது. ஆனால் தைரியமாகப் போட்டோவை அவரிடம் எடுத்துக் கொடுக்க நான் முன் வரவில்லை.

'ஹ்ம்' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே மறுபடி என் அருகில் வந்து உட்கார்ந்தார்.

நான் மெதுவாக, "என்ன?" என்று கேட்டேன்.

"ஒன்றுமில்லை" என்று சொல்லிவிட்டு மறுபடியும் பெருமூச்சு விட்டார்.

குற்றமுள்ள என்னுடைய நெஞ்சு குறுகுறுத்தது. சிறிது நேரம் பேசாமல் இருந்தேன். பிறகு அவரிடம் போட்டோவை எடுத்துக் கொடுக்க எண்ணி, "போட்டோதானே! நான்தான் எடுத்துப் பார்த்தேன். இதோ!" என்று தலையணையைத் தூக்கிப் போட்டோவை எடுத்து அவரிடம் கொடுத்தேன்.

அவர் அவை இரண்டையும் உற்றுப் பார்த்தார். என் மனத்தில் எழுப்பிய புயலைப்போல் அவர் மனத்திலும் சிந்தனை அலைகள் வீசத்தான் செய்தன.

அவருடைய சோகம் இழைந்த முகத்தையும், அவர் விட்ட பெருமூச்சையும் கண்ட எனக்கே அவரிடம் இரக்கம் ஏற்பட்டது. ஆறும் புண்ணைக் கீறிவிட்டு வேடிக்கை பார்ப்பது நியாயமா?

மெதுவாக அவர் எழுந்து போட்டோக்களை மறுபடியும் ஆணியில் மாட்டினார்.

நான் அதை எறிட்டுப் பார்த்த பொழுது சிறிது நேரத்துக்கு முன்னால் கண்ட அர்த்தமில்லாத அசட்டுப் பயங்கரக் கனவின் நினைவுதான் முன் வந்து நின்றது.

"வேண்டாம், அந்தப் போட்டோக்களை எடுத்து உள்ளே வைத்து விடுங்கள்!" என்று சொல்லி விட்டேன்.

அதற்குப் பதிலாக அவர் "ஏன்?" என்று என்னைக் கேட்டுவிட்டுப் பார்த்த பார்வை அர்த்த புஷ்டியுள்ளதாயிருந்தது.

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமென்று நான் துடித்தேன். என் மனத்தில் எழுந்த உணர்ச்சிகளையும், சந்தேகத்தையும், நான் கண்ட கனவையும் சொல்லிவிட வேண்டும் என்கிற ஆவல் மீறி வந்தது.

"அவை என் கண்ணுக்கெதிரில் இருக்க வேண்டும்? உங்களுக்குப் பழைய ஞாபகங்களைக் கிளறிவிட்டுச் சஞ்சலமுண்டாக்காதா? அதனால்தான்!" என்றேன்.

"படங்களை எடுத்துப் பெட்டியில் மறைத்து வைத்து விட்டால் என் மனத்தி

னுள்ள ஞாபகங்களும் மறைந்து விடுமா, என்ன?" என்று கேட்டார்.

'சுரீர்' என்று சாட்டையால் அடிப்பது போல் இந்தக் கேள்வி என் காதில் விழுந்தது.

'ஆம், அவர் நியாயவான். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசவில்லை. அவர் மனம் தம் இரண்டு மனைவிகளின் நினைவையும் மறந்து விடவில்லை. இடுப்பில் பாறாங்கல்லைக் கட்டிக்கொண்டு நீந்தத் தண்ணீரில் இறங்குவதுபோல், அந்தச் சோக நினைவுகள் மனத்தைச் சூழ அவர் என்னுடன் வாழ்க்கை தொடங்குகிறார்' என்று என் மனத்திற்குத் தெளிவாகத் தெரிந்து விட்டது.

போட்டோவை மறைத்தாலும் அவர் மனம் தெளியாது. ஒரு வேளை பழைய ஞாபகங்கள் அதனால் அதிகமானாலும் ஆகும். இப்படியாகச் சிந்தித்து, "அப்படியானால் அங்கேயே இருக்கட்டும்!" என்று கூறினேன்.

அவர் என்ன நினைத்தாரோ, என்னமோ—சிறிது நேரம் போட்டோக்களைக் கையில் எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு மறுபடியும் அவற்றை ஆணியில்மாட்டி விட்டு என் அருகில் வந்து அமர்ந்தார்.

"லக்ஷ்மி, என்மீது கோபமா?" என்று கேட்டார்.

"உங்கள் மீதா? எதற்காகக் கோபித்துக் கொள்ள வேண்டும்?"

"போட்டோவை உள்ளே எடுத்து வைக்கக் கூடாது என்று சொன்னேனே, அதனால்?"

"அதனால் என்ன? உண்மையைத்தானே நீங்கள் சொன்னீர்கள்? அதை மறைத்து விட்டால் மட்டும் உங்கள் ஞாபகங்கள் மறைந்துவிடுமா, என்ன?"

"லக்ஷ்மி! அவர்கள் இரண்டு பேரும் எனக்கு உயிர் போன்றவர்கள். மூத்தாள் போன துக்கத்தை ஆற்றிப் புத்துயிர் ஊட்டினாள் என் லலிதா. பாழும் தெய்வம் சதி செய்து விட்டது. என் லலிதாவும் பிரசவ வேதனையில் உயிர் நீத்தாள். இப்போது என் வாழ்க்கைக்குத் துணையாக உன்னைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறேன். என்னுடைய துக்கத்தை ஆற்றுவது உன் கடமையல்லவா? அவர்கள் இரண்டு பேரும் வகித்த ஸ்தானத்தை நீயும் நன்றாய் நிர்வகிக்க வேண்டும்" என்று சொன்னார். அவர் நாத் தழுதழுத்தது; கண்கள் இரண்டும் கண்ணீரினால் நிறைந்தன.

என்னையும் மீறி எனக்கு அழுகை வந்து விட்டது. அவருடைய வார்த்தைகள் அனைத்தும் சத்தியம். அவர் என்னிடம் ஒன்றையும் மறைக்கவில்லை. தமது இரண்டு மனைவிகள் இறந்த துக்கத்தை ஆற்றிக் கொள்ளவே என்னைக் கைபிடித்திருக்கிறார். அவருக்கு ஏற்றபடியல்லவா நான் நடந்து கொள்ள வேண்டும்? கேவலம், சுயநலத்தினால் அவர் மீது வீண் சந்தேகம் கொண்டேன். என்னுடைய சுயநலத்தைச் சிறிதாவது தியாகம் செய்து அவர் மனப் புண்ணை ஆற்ற வேண்டும். அது என் கடமை. அதை எப்படிச் செய்ய வேண்டும்? ஒரு நாளில் அவரது பழைய ஞாபகங்களை விரட்டிவிட முடியுமா? என்னுடன் அவர் கொஞ்சிக் குலாவ வேண்டும் என்பதற்காக, அவர் இறந்துபோன தமது இல்லாள் இரண்டு பேருக்கும் நினைத்த மாத்திரத்தில் துரோகம் செய்ய வேண்டுமா? இல்லை, இல்லை. காலம் என்னும் காற்று அவரது புண்ணைத் தானாக ஆற்றிவிடும். ஆற்று வெள்ளத்துடன் சேர்ந்து நீந்தித்தான் கரையேற வேண்டும். க்ஷணத்தில் கரை சேர வேண்டும் என்று ஆசைப்பட்டுக் குறுக்கே பாய்ந்தால் மூழ்க வேண்டியதுதான்!

என்னையும் மறந்து நான் அவர் மடியில் சாய்ந்தேன். "நான் உங்கள் அடிமை. நீங்களே எனக்குக் கதி! உங்கள் இஷ்டத்துக்கு மாறாக நான் ஒன்றும் செய்ய மாட்டேன். அவர்கள் இரண்டு பேருக்கும் அளித்த அன்பை எனக்கும் அளித்தால் போதும்!" என்று சொன்னேன்.

"அதில் என்ன சந்தேகம்? இதோ, என்னைப் பார்!" என்று அவர் என் தலையை நிமிர்த்தினார்.

உண்மையில் அன்றே நான் அவருடைய அடிமையாகி விட்டேன்!

இப்போது என் மனத்தில் அவ்வப்போது கொஞ்சம் சந்தேகம் எழுந்தாலும், அது என் இன்ப வாழ்க்கைக்குக் குறுக்கே நிற்பதில்லை. நான் அவருக்கு மூன்றாம் தாரம் என்கிற குறைதான் இருக்கிறது. மற்றபடி நான் சந்தோஷமாகவே இருக்கிறேன்.

உடனே உன் அபிப்பிராயத்தைத் தெரிவித்து எனக்குப் பதில் போடவும்.

உன் பிராண சிநேகிதி,
லக்ஷ்மி.

குழந்தைகள் சண்டை

எஸ். வி. எஸ்.

உலக மகா சண்டைகளைக் கண்டு எனக்குப் பயமே கிடையாது. ஆனால் இந்தக் குழந்தைகளின் சண்டைதான் என்னை ரொம்பவும் பயப்படுத்துகிறது!

இதோ கேளுங்கள், 'வீல்' என்று வரும் குரலை:

"அம்மா! ராதா அடிக்கிறா!"

"அப்பா! ராமு கிள்ளுறானே!"

"என்னடா இது, பசங்களா! எந்த நேரமும் என்ன சண்டைதானா!"

"அப்பா! அப்பா! ராமு என் தொடையை எப்படி கிள்ளியிருக்கிறான் பார், அப்பா!"

"அவன்தான் என்னை முதலில் அடிச்சாப்பா!"

"அவன்தான் அப்பா முதலில் என்னை 'வெவ்வெவ்வே' என்று அழகு காட்டினான்!"

"அதற்கு முன்னாலே அவன்தான் 'மூஞ்சியைப் பாரு மூஞ்சியை — மூதேவி மாதிரி!' என்றான்!"

இப்படிப் போய்க் கொண்டிருந்தால் இதற்கு முடிவேது?

இதாவது போகட்டும். வீட்டில் குழந்தைகள் இருக்கிறார்களே என்று ஏதாவது தின் பண்டம் வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தால் அதுவும் விபரீதமாக முடிகிறது!

அன்றைக்குப் பாருங்கள், ஒரு பொட்டணம் 'மிக்ஸர்' வாங்கிக் கொண்டு போய் ராமுவிடம் கொடுத்து, "நீயும் ராதாவும் எடுத்துக்கொள்ளுங்கள்!" என்றேன்.

உடனே ராதா, "அப்பா, ராமுவிடம் கொடுக்காதே, அவன் அதிகமாக எடுத்துக் கொள்வான். நீயே சரி சமமாகப் எங்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்திடு, அப்பா!" என்று அழுதான்.

"இது எதடா உபத்திரவம்!" என்று எண்ணிக் கொண்டே பிரித்துக் கொடுத்தேன்.

தொல்லை அதோடு விட்டது என்கிறீர்களா? கிடையாது!

ராமு "எனக்கு மூணு முந்திரி பருப்பு இருக்கே!" என்று மூன்று முந்திரி பருப்புகளை வைத்துக் கொண்டு குதித்தான்.

"எனக்கும்தான்.........!" என்று ஆரம்பித்த ராதா, சிணுங்கி அழ ஆரம்பித்து விட்டாள்! அவளுக்கு இரண்டு முந்திரி பருப்புகள்தான் இருந்தன.

"அப்பா, அவனுக்கு மட்டும் மூணு முந்திரி பருப்பு! உம், உம், உம்...!"

"அதற்கு நான் என்ன பண்ணட்டும்?" என்றேன்.

"அவன்தான் உனக்குச் செல்லம்! வேணும்னு மூணு முந்திரி பருப்பு இருக்கிற பங்காகப் பார்த்துக் கொடுத்தாய்!" என்று அசட்டுப் பிசட்டு என்று உளறினாள் அவள். கோபம், அழுகையெல்லாம் போல வருகிறதல்லவா?

இவர்கள் சண்டையைத் தீர்ப்பதற்கு அடுத்த நாளிலிருந்து ஒரு காரியம் செய்தேன். அதாவது மறு நாளிலிருந்து காலணுவுக்குக் கூட ஒரு தின்பண்டமும் வாங்கி வருவதில்லை என்பதாக!

ஆனாலும் மனசு கேட்கிறேன் என்கிறதா? ஒரு தடவை ராமுவுக்கு ஒரு சாக்லெட் கொடுத்து, "ராதாவுக்குத் தெரியாமல் சாப்பிடு!" என்று சொன்னேன்.

அப்புறம் ராதாவைக் கூப்பிட்டு, அவளிடமும் ஒரு பெப்பர்மெண்டைக் கொடுத்து, "ராமுவுக்குத் தெரியாமல் சாப்பிடு!" என்றேன்.



அவர்களுக்கு வாங்கிக் கொடுக்காமலிருக்க என் மனசு எப்படிக் கேட்கவில்லையோ, அதே போல குழந்தைகளுக்கும் அப்பாவின் விசேஷ சலுகையைப் பற்றி ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை!

"அப்பா எனக்கு மட்டும் சாக்லெட் கொடுத்தாரே!" என்றான் ராமு.

"அப்பா எனக்கும்தான் ஒரு பெப்பர்மெண்ட் கொடுத்தார்!" என்றான் ராதா.

பிறகு இரண்டு பேரும் என்னிடம் வந்து, "அவனுக்கு மட்டும் என்ன அப்பா சாக்லெட்?" — "அவளுக்கு மட்டும் என்ன அப்பா பெப்பெர்மெண்ட்?" என்று சண்டை போட ஆரம்பித்து விட்டார்கள்.

இப்படி எத்தனையோ அப்பாக்கள், எத்தனையோ குழந்தைகளிடம் அகப்பட்டுத் திண்டாடிக் கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட திண்டாட்டம் நாம் மட்டும் அனுபவிக்கவில்லை; நம்மைப் படைத்த சர்வேச்வரனே அனுபவித்தான் என்கிறபோது நமக்குச் சற்று ஆறுதல் ஏற்படுகிறது. ஆமாம். ஒரு சமயம் யாரோ ஒருவர் சிவபெருமானிடம் ஒரு பழம் கொண்டு வந்து கொடுத்தாராம். அவர் தம் அருமருந்தன்ன குழந்தைகளாகிய கணபதியையும் கந்தனையும் கூப்பிட்டு, "யார் இந்த உலகத்தை முன்னாலே ஒரு பிரதக்ஷிணம் பண்ணிவிட்டு வருகிறார்களோ, அவர்களுக்கு இந்தப் பழம்!" என்றாராம்.

உடனே முருகப் பெருமான் தமது மயில் வாகனத்தில் ஏறிக் கொண்டு புறப்பட்டு விட்டாராம்.

தொந்தி கணபதி பார்த்தாராம். என்ன செய்வது என்று புரியவில்லை. சிவபெருமானையே ஒரு பிரதக்ஷிணம் செய்து விட்டு, "நான்தான் உலகம்; உலகமே நான்தான் என்றீரே அப்பா, அதனால் உன்னைச் சுற்றினால் உலகத்தைச் சுற்றினாற்போலத்தானே?" என்றாராம்.

அந்த அசட்டு அப்பா, தம் மூத்த பிள்ளையின் சமத்காரமான வார்த்தையைக் கேட்டுப் பழத்தைக் கொடுத்து விட்டாராம்.

உலகத்தைச் சுற்றி வந்த முருகப் பெருமான் கோபமடைந்து, ஆண்டிப் பண்டாரமாக ஒரு குன்றின்மேல் போய் நின்று விட்டாராம்! கடைசியில் "நீயே பழம்; பழம் நீ" என்று சொல்லி சமாதானப் படுத்தி அழைத்து வந்தாராம் அந்த சிவபெருமான்.

* * *

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆப்பிரகாம் லிங்கன் வீட்டில் ஒரு சமயம் ஏகக் கூச்சலாக இருந்ததாம். அடுத்த வீட்டுக்காரர் "என்ன?" என்று விசாரித்தாராம்.

"இந்தக் குழந்தைகள், உலக வல்லரசுகளைப் போலவே சண்டை பிடிக்கின்றன. என் கையில் மூன்று மிட்டாய்கள் இருக்கின்றன. ஒவ்வொரு குழந்தையும் தனக்கு இரண்டு மிட்டாய்கள் வேண்டும் என்று கேட்டுத் தொலைக்கிறது!" என்றாராம்.

இரண்டாவது மகா யுத்தத்துக்குப் பிறகு இப்போது நாலு வல்லரசுகள் சண்டை போட்டுக் கொள்வதைப் பார்த்தால், இந்தப் பாடம் அவரவர் குழந்தைகளிடம் கற்றுக் கொண்டதோ என்று எனக்குச் சந்தேகம் ஏற்படுவது நியாயந்தானே?

காலக்ஷேபம்

இது வேறு ரகம்!

ஒரு சங்கத்தின் வருஷாந்திரக் கொண்டாட்டத்தின் போது தலைமை வகித்த பிரமுகர் பின் வருமாறு பேசினார்:—"நான் பார்த்த பல சங்கங்களில், அங்கத்தினர்களில் பாதிப் பேர்தான் சங்கத்திற்காக உழைப்பார்கள். மற்றப் பாதிப் பேர் சோம்பேறிகளாக இருப்பார்கள். ஆனால் இந்தச் சங்கம் அப்படியல்ல: அதற்கு நேர் எதிர்!"

—ரா. தேவராஜன்.

சரிதான்!

விச்சு:—ஏன் மாமா, நான் ஸ்டேஷனிலே இறங்கி உங்க வீட்டுக்கு எப்படி வருகிறது?

மாமா:— போடா மண்டு, வைத்தியக் காரனைக் கேட்டால்கூடச் சொல்லுவானே!

விச்சு:—அதுதான் மாமா, உன்னைக் கேட்டேன்! —ஆர். செல்லப் பிள்ளை.

குரல் கேட்குமா?

அபேக்ஷகர் (தேர்தல் சமயத்தில்):—என்னை மட்டும் நீங்கள் தேர்ந்தெடுத்தீர்களானால் ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலிருக்கும் பிரிட்டிஷ் மந்திரிகளின் காதில் விழும்படி சிம்மகர்ஜனை செய்வேன்.........

கூட்டத்தில் ஒரு குரல்:—ஐயா! கொஞ்சம் உரக்கப் பேசுங்கள். காதில் விழவில்லை!

—ஆர். கணபதி.

அசுர சாதகம்

டாக்டர்:—ஏது, நேத்திவரைவிட இன்னிக்கு உங்களுக்கு இருமறது சுலபமா இருக்காப் போலே இருக்கே!

நோயாளி:— அதுக்கென்ன! ராத்திரியெல்லாம் தூங்கிறுந்தானே? அசுர சாதகமான்றோ! —டி. வி. எஸ். மணி.



சந்திர ஹாரம்

ஆசிரியர்: பிரேம்சந்த் | மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

— ஏழாம் அத்தியாயம் —

"திருடன்! திருடன்!"

இரவு சுமார் பத்து மணி இருக்கும். பத்மா மாடியில் உள்ள வெளி வராந்தாவில் படுத்துக் கொண்டிருந்தாள். நிலவு பால் போல் காய்ந்து கொண்டிருந்தது. அந்த நிலவு வெளிச்சத்திலே நகரத்தின் கோபுரங்கள், ஸ்தூபிகள், மரங்கள் எல்லாம் வெகு ஒய்யாரமாகக் காட்சி யளித்துக் கொண்டிருந்தன. பத்மா அந்தச் சந்திரனையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய மனத்தில் பழைய நினைவுகள் எல்லாம் வெள்ளித் திரையில் வந்து போகும் படங்களைப்போல ஒன்றன் பின் ஒன்றாக வந்து போய்க் கொண்டிருந்தன. இந்த நிமிஷம் நினைத்த விஷயம் அடுத்த நிமிஷம் மறந்து விடும். எவ்வளவு மூளையைச் செலவிட்டாலும் பிறகு நினைவுக்கே வராது. ஒரு தடவை அவள் தன் பிறந்தகத்தை நினைத்துக் கொண்டாள். கண்களில் நீர் சுரந்து விட்டது. அடுத்த கணம் தோழிகளின் நினைவு எழவே, கண்ணீர் மாயமாய் மறைந்து விட்டது. வதனத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. தன் பால்ய நினைவுகளில் லயித்த அவள் தானாகவே 'களுக்' கென்று சிரித்துக் கொண்டாள். இதே சமயம் ரமாகாந்த் வதனத்தில் புன்முறுவல் தாண்டவமாட, கையில் ஒரு பொட்டணத்தை ஏந்திய வண்ணம் உயரே வந்து பக்கத்தில் கிடந்த கட்டிலில் உட்கார்ந்து கொண்டான்.

"அது என்ன பொட்டணம்?" என்று கேட்டாள் பத்மா.

"என்னவா யிருக்கலாம்? நீதான் சொல்லேன், பார்ப்போம்" என்று சிரித்தவாறே கேட்டு வைத்தான் ரமாகாந்த்.

"உங்கள் முகம் தான் 'அது புன்முறுவல்' என்று சொல்லுகிறதே!" என்று சொல்லியவாறு பத்மா சிரிப்பை அடக்க மாட்டாமல் சிரித்து விட்டாள்.

"இல்லை, அப்புறம்...?"

"சித்ரா தேவியைப் பொட்டணத்தில் கட்டிப் பிடித்துக் கொண்டு வந்திருப்பீர்கள்!"

"அதுவும் இல்லை...!"

"அப்படியானால் அது காதற் கனியாகத் தான் இருக்க வேண்டும்."

"கனி யில்லை; மலர்தான்! இன்று அதைக் கொண்டு உன்னைச் சிங்காரிக்கப் போகிறேன்!" என்றான் ரமாகாந்த்.

இதைக் கேட்ட பத்மாவின் வதனம் சூரியனைக்கண்ட தாமரைபோல் மலர்ந்தது. ரமாகாந்த் மிகவும் பிரியமாக அவள் தலையில் புஷ்பத்தைச் சூட்டினான். 'கமகம' வென்று வாசனை வீசும் புஷ்பத்தின் 'ஜில்' என்ற ஸ்பரிசம், அவளுடைய பூப் போன்ற உடலைப் புல்லரிக்கச் செய்து விட்டது.

அந்த மலர்களைப் போலவே அவளுடைய உடலும் மலர்ச்சி யுற்றது.

பத்மா வாய் திறக்க வில்லை. அவளுக்குத் தன் கணவனைப் பார்க்கக் கூட வெட்கமா யிருந்தது. கண்ணாடியில் போய் தன் அழகைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற அவா அவளுடைய உள்ளத்தில் உதித்தது. எதிர்ப்புறத்தே இருந்த அறையில் சுவர் ஒட்டி விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அவள் எழுந்து அந்த அறைக்குள் போனாள். அங்கே யிருந்த கண்ணாடிக் கெதிரே நின்று கொண்டு, மெய்மறந்து தன் அழகைப் பார்க்கலானாள். அழகு மயக்கத்தில் தானே 'ரம்பை' என்று கற்பனை செய்து கொண்டாள். பிறகு அங்கே யிருந்த வெற்றிலைச் செல்லத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, வெகு ஒய்யாரமாக வெளியே வந்தாள். நேரே கணவனுக்கு அருகில் போய் உட்கார்ந்து கொண்டு வெற்றிலை மடிக்கலானாள்.

ரமாகாந்த் தான் செய்யத் துணிந்திருக்கும் வஞ்சக எண்ணத்தை எண்ணி, மிகவும் வருந்தினான். பத்மா தன் காதல் வீசும் கண்களால் அவனை ஒரு தடவை பார்த்தாள். நம்பிக்கையும் இனிமையும் தாண்டவமாடும் அவளுடைய பார்வைக் கெதிரே, அவனால் தலை நிமிர்ந்து நிற்க முடியவில்லை. பேசாமல் அவன் 'சட்' டென்று முகத்தைத் திருப்பிக்கொண்டு விட்டான். 'என்னைப் போன்ற பயந்தாங் கொள்ளி இந்தப் புவியில் யாருமே இருக்க முடியாது. நான் 'முடியாது' என்று சொல்லி யிருந்தால் அப்பா என் தலையைச் சீவி விடுவாரா, என்ன? நான் புத்தி கெட்டுப் போய் அப்பொழுது என் சம்மதித்தேன்?............ பத்மாவிடம் வீட்டின் நிலைமையை விளக்கித் தெளிவாகச் சொல்லி யிருந்தால் இம்மாதிரி யெல்லாம் கஷ்டப்பட வேண்டி யிருந்திரா தல்லவா? அப்படிச் செய்யாமல் இருந்தது என் மேல்தானே தப்பு?' என்று எண்ணும் பொழுதே அவனுடைய கண்களில் நீர்மல்கி நின்றது. அதைக் காட்டிக் கொள்ளாமல் இருக்கும் பொருட்டு, எழுந்து மாடியின் கைப்பிடிச் சுவருக் கருகில் போய் நின்று கொண்டான். தான் செய்யத் துணிந்திருக்கும் வஞ்சகச் செயலைப் பற்றி அவளிடம் கூறி மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடலாமா என்றுகூட ஒரு கணம் சிந்தித்தான். ஆனால் 'பத்மா தன்னைப் பற்றி என்ன எண்ணுவாள்?' என்ற எண்ணம் அடுத்த கணமே எழுந்து, அவனுடைய மனதை மாற்றி விட்டது. அவன் பத்மாவுக் கெதிரில் தன்னைத் தாழ்ந்தவனாகக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை.



பத்மா, அவனை அன்புடன் ஒரு முறை பார்த்து விட்டு, "கல்யாணத்துக்கு முன்னால் என் தாத்தா உங்களைப் பார்க்க வந்திருந்தாரல்லவா? அவர் திரும்பி வந்து, அம்மாவிடம் உங்களைப் பற்றி என்னவெல்லாம் புகழ்ந்தார், தெரியுமா? அவர் வருணித்த வருணனையைக் கேட்ட பிறகு, 'உங்களைப் பார்க்க வேண்டும்' என்று என் மனம் என்ன துடியாய்த் துடித்தது, தெரியுமா?" என்றாள்.

ரமாநாத் ஒரு நீண்ட பெரு மூச்சு விட்டானே தவிர, வாய் திறந்து ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை.

"என்னுடைய தோழிகள் எல்லாரும் உங்களைப் பார்த்து அப்படியே மெய் மறந்து நின்று விட்டார்கள். நளினி இருக்கிறாளே, அவள் ஜன்னலை விட்டு நகரவே யில்லை. உங்களோடு ஒரு வார்த்தை யாவது பேச வேண்டும் என்று துடியாய்த் துடித்தாள். நீங்கள் உள்ளே வந்தபொழுது அவள் தானே உங்களுக்கு வெற்றிலை கூட மடித்துக் கொடுத்தாள். உங்களுக்கு நினைவிருக்கிறதோ?" என்று மறுபடியும் கேட்டாள் பத்மா.



ரமாநாத் இதற்கும் பதிலே சொல்லவில்லை.

"என்ன! ஒருத்தி மூக்கும் முழியுமா, 'செக்கச் செவேல்' என்று வந்திருந்தாளே, அவளுடைய கன்னத்திலே கூட ஒரு சின்ன கறுப்பு மச்சம் இருந்ததே, அவளை நீங்கள் கூடக் கடைக் கண்ணால் அன்பொழுகப் பார்க்கவில்லையா? நீங்கள் பார்த்ததும் அவளுக்கு ஒரே வெட்கமாய்ப் போய் விட்டது! தோழிகள் எல்லாரும் அவளைப் படாத பாடு படுத்தி அழ வைத்து விட்டார்கள்! அவளை உங்களுக்கு ஞாபகமிருக்கிறதோ?" என்று மறுபடியும் விடாமல் கேட்டாள் அவள்.

"ஞாபகம் இல்லையே!" என்று கிணற்றில் விழுந்தவனைப் போல் சொன்னான் ரமாநாத்.

"ஞாபகமில்லையா? அடுத்த தடவை ஊருக்குப் போகும் பொழுது, அவளைக் காட்டுகிறேன். ஆமாம், இன்றைக்கு நீங்கள் கடைத் தெருவுக்குப் போயிருந்தீர்களோ?"

"இன்றைக்குப்போக ஒழியவே யில்லை" என்று தலை குனிந்தவாறே, ரமாநாத் பதில் சொன்னான்.

"போங்கோன்னா! இனிமேல் நான் உங்களோடு பேசவே போகிறதில்லை. எப்பொழுது பார்த்தாலும் இந்த மாதிரி சாக்குப் போக்குச் சொல்லுகிறீர்களே! ஆமாம், ஒரே பேச்சு! நாளைக்காவது வாங்கித் தருவீர்களா, மாட்டீர்களா?" என்று கேட்டாள் பத்மா.

ரமாநாத்துக்கு மனதை என்னவோ செய்தது. அவளோ சந்திர ஹாரத்தின் நினைவாகவே இருக்கிறாள்! விதியோ, அவனுக் கெதிராகச் சதி செய்கிறது! எந்தப் பெண்ணுக்காக அவன் தன் உயிரையும் தியாகம் செய்யத் தயாரா யிருக்க வேண்டுமோ, அந்தப் பெண்ணிடத்தில் இருப்பதை யெல்லாம் பறிப்பதற் கல்லவா அவன் சூழ்ச்சி செய்ய வேண்டி யிருக்கிறது! இதை எண்ணும் பொழுது, 'அப்படியே மாடியி லிருந்து கீழே குதித்து உயிரையே மாய்த்துக் கொண்டு விட்டால் என்ன?' என்றுகூட அவன் நினைத்தான்.

நள்ளிரவு கழிந்து விட்டது. சந்திரனும் திருடனைப் போல், ஒரு மரத்தின் மறைவில் ஒளிந்து கொண்டு பார்க்கலானான். பத்மா தன் கணவரின் கழுத்தில் கையைப் போட்ட வண்ணம் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். ரமாநாத் மனதை மிகவும் திடப் படுத்திக் கொண்டு மெதுவாக எழுந்திருந்தான். ஆனால், தூக்கத்தில் ஆழ்ந்திருந்த

அந்தப் பூங்கொடி அவனுடைய மனதை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டாள். ஆசை ததும்பும் விழிகளுடன் அவன் உறங்கும் அந்தக் கமலவதனத்தைச் சிறிது நேரம் பார்த்தவாறு மெய்மறந்து நின்றான். அறைக்குள்ளே போக அவனுக்குத் துணிவு உண்டாகவில்லை. மறுபடியும் படுத்துக் கொண்டு விட்டான்.

பத்மா திடுக்கிட்டு எழுந்து, "எங்கே போகிறீர்கள்? பொழுது விடிந்து விட்டதா, என்ன?" என்று கேட்டாள்.

"இல்லை, தாகமாயிருந்தது. தண்ணீர் குடிப்பதற்காக எழுந்திருந்தேன்!" என்று மென்று விழுங்கிக் கொண்டே பதில் சொன்னான் ரமாகாந்.

பத்மா ரமாகாந்தின் கையைப் பிடித்து இழுத்து அவனைப் படுக்க வைத்தவாறே, "இம்மாதிரி யெல்லாம் நீங்கள் என்னை மந்திரம் போட்டு மயக்குவது என்றால் நான் ஓடிப் போய் விடுவேன். ஆமாம், எதற்காக என்னை இப்படி யெல்லாம் பார்க்கிறீர்கள்? நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்றே எனக்குப் புரியமாட்டேன் என்கிறதே! என் மனதை ஆட்டி வைக்க நீங்கள் என்ன மந்திரந்தான் கற்றுக் கொண்டு வந்திருக்கிறீர்களோ, தெரிய வில்லை. புருஷர்களின் கண்களில் ஒரு வித மந்திர சக்தி இருக்கிறது என்று பானர்ஜி அடிக்கடி சொல்லுவாள். அது நிஜம்தான் போலிருக்கிறது!" என்றாள்.

ரமாகாந், "மந்திர சக்தியாவது, இந்திர சக்தியாவது! அதெல்லாம் ஒன்றுமில்லை. கண்களுக்குத் தாகம் எடுத்தால் தணித்துக் கொள்ள வேண்டுமோ, இல்லையோ! அது தான் உன்னைப் பார்க்கிறேன்!" என்று மனமுடைந்த குரலில் சொன்னான்.

பிறகு இருவரும் தூங்க ஆரம்பித்தார்கள். அவளோ உல்லாசத்தில் ஆழ்ந்து தூங்க முயன்றாள்; அவனோ கவலையில் உழன்று தூங்க முயன்றான்.

அதற்கப்புறம் மூன்று மணி நேரம் சென்றுவிட்டது. ஆகாதிச் சந்திரனும் ஜகஜ்ஜோதியான தன் விளக்கை அணைத்து விட்டு ஓய்வு எடுத்துக் கொள்ளச் சென்று விட்டான். விடியற்காலையின் குளிர்ந்த காற்று 'ஜில்ஜில்'லென்று வீச ஆரம்பித்து விட்டது. கடைசி ஆட்டம் வரையில் விழித்துக் கொண்டிருக்கும் வெற்றிலைப் பாக்குக் கடைக்காரர்கள்கூடத் தூங்க ஆரம்பித்து விட்டனர். ஆனால் ரமாகாந் மட்டுந்தான் தூங்கவில்லை. அவன் மனம் போராடிக் கொண்டிருந்தது. மனதைத் திடப்படுத்திக் கொண்டு எழுந்து உட்காருவான், சில சமயம். அடுத்த கணம் மனச் சோர்வுற்றுப் படுத்து விடுவான். கடைசியில் காலடிக்கும் சத்தம் காதில் விழுந்ததோ இல்லையோ, மனதைத் திடப்படுத்திக் கொண்டு எழுந்து அறைக்குள்ளே போனான். நகைப் பெட்டி அலமாரியில் இருந்தது. ரமா மெதுவாக அலமாரியைத் திறந்து அதை எடுத்துக் கொண்டான். உடல் நடுநடுங்க, மெது வாகக் கீழே இறங்கினான். பதட்டத்தில் சில நகைகளை மட்டும் பொறுக்கி எடுத்துக் கொண்டு போக அவனுக்கு அவகாசம் கிடைக்கவில்லை.

தயாநாதபாபு கீழே உள்ள வராந்தாவில் தூங்கிக்கொண்டிருந்தார். ரமாகாந் மெது வாக அவரை எழுப்பினான். அவர் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்து, "யார், அது?" என்று உளறிக் கொட்ட ஆரம் பித்தார்.

ரமாகாந் உதட்டில் விரலை வைத்துச் சத்தம் போடாமல் இருக்கும்படி ஜாடை காட்டி, "நான்தான் நகைப் பெட்டி கொண்டு வந்திருக்கிறேன், இந்தாருங்கள்!" என்றான்.

தயாநாதபாபு கண்ணைத் தேய்த்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தார். இது வரை அவருடைய கண்கள் மட்டும்தான் விழித்திருந்தன. இப்பொழுது அவருடைய அறிவும் விழித்துக் கொண்டது. 'நான் நகைகளை அவளுக்குத் தெரியாமல் கொண்டு வந்து தந்துவிடுகிறேன்' என்று ரமாகாந் சொன்னபொழுது, 'ஏதோ ஆத்திரத்தில் சொல்லுகிறான், அப்படி யெல்லாம் செய்யமாட்டான்' என்று அவர் எண்ணினார். 'ரமா சொன்னபடி செய்துவிடுவான்' என்ற எண்ணமே அவ ருக்கு இது வரை எழவில்லை. இம் மாதிரி நீசச் செயல்கள் செய்ய அவருடைய மனம் ஒப்பவில்லை. பையனுடன் இது சம்பந்தமாக வாதாடலாம் என்றாலோ, அதற்கு அது சரியான சந்தர்ப்பமாக இல்லை. அவர் தன்னைத் தானே கொத்து கொண்டு, "இதை ஏன் எடுத்து வந்தாய்?" என்று கேட்டார்.

ரமாகாந் அதிகப் பிரசங்கித்தனமாக, "நீங்கள் தானே கொண்டு வரச் சொன் னீர்கள்?" என்றான்.

"எதற்காக இப்படிப் பொய் சொல்லு கிறாய்?" என்று தயாநாதபாபு கேட்டார்.

"அப்படியானால் கொண்டுபோய் இருந்த இடத்தில் வைத்து விட்டுமா?"

ரமாகாந்தின் இந்தக் கேள்வி தயாநாத பாபுவைத் தர்ம சங்கடத்தில் ஆழ்த்தி விட்டது. அவர் வெட்கிப்போய், "இனி மேல் கொண்டு போய் வைப்பானேன்? எங்கேயாவது அவன் பார்த்துவிட்டால் அப்புறம் அனர்த்தம் தான். நாடு சிரிக்கும் நிலைமை ஏற்பட்டுவிடும். இந்த கைப் பெட்டியைக் கொண்டுபோய் என் பெரிய பெட்டியில் வைத்துவிட்டுப் போய்த் தூங்கு. அவன் விழித்துக் கொண்டுவிடப் போகிறான்! உம்......சீக்கிரம்!" என்றார்.

வராந்தாவுக்குப் பின்னால்தான் தயாநாத பாபுவின் அறை யிருந்தது. அங்கே தேவதாரு மரத்தினால் செய்யப்பட்ட பெரிய பெட்டி ஒன்று வைக்கப்பட்டிருந்தது. ரமாகாந்த் கைப் பெட்டியை அதற்குள் வைத்து விட்டு அவசர அவசரமாக உயரே ஏறிச் சென்றுவிட்டான். 'பத்மா தூங்குகிறாளா, விழித்துக் கொண்டிருக்கிறாளா?' என்பதையறிந்து கொள்ளுவதற்காக, நடக்கும் போதே கால்களைக் கொண்டு கொஞ்சம் ஓசைப் படுத்திப் பார்த்தான். யாருக்கும் பொழுது புலரும் பொழுதுதானே நல்ல தூக்கம் வரும்? ஆகவே பத்மாவும் அப்போது நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்.

ரமாகாந்த் கட்டிலில் உட்கார்ந்தான். பத்மா திடுக்கிட்டு எழுந்து அவனை அணைத்துக் கொண்டாள்.

"ஏன் இப்படிப் பயப்படுகிறாய்?" என்று கேட்டான் ரமாகாந்த்.

பத்மா பரபரப்புடன் கண்களை அகல விழித்து, "இல்லை...... ஒரு கனவு கண்டேன்...... ஆமாம், நீங்கள் ஏன் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்? இன்னும் பொழுது விடிய எத்தனை நேரம் இருக்கிறது?" என்று கேட்டாள்.

ரமாகாந்த் படுத்துக் கொண்டே, "பொழுது விடியப் போகிறது. ஆமாம், நீ என்ன கனவு கண்டாய்?" என்று கேட்டான்.


"யாரோ ஒரு திருடன் என் கைப் பெட்டியை எடுத்துக் கொண்டு போவது போல கனவு கண்டேன்...!"

ரமாவின் இதயம், பழுக்கக் காய்ச்சிய இரும்பில் சம்மட்டி கொண்டு அடிப்பது போல, 'படீர், படீர்' என்று அடித்துக் கொண்டது. அவனுக்கு ரத்தமே உறைந்து விட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. ஒரு வேளை, 'நான் கைப் பெட்டியை எடுத்துக் கொண்டு போன பொழுது இவள் என்னைப் பார்த்திருப்பாளோ?' என்ற சந்தேகம் எழுந்து அவனுடைய மனதை வாட்டியது. அடுத்த நிமிஷம் அவன் தன்னையும் மறந்து உரக்க, "திருடன்! திருடன்!" என்று கத்தினான்.

கீழே வராந்தாவில் படுத்திருந்த தயாநாத பாபுவும், அவனைத் தொடர்ந்து, "திருடன்! திருடன்!" என்று இரைந்து குரல் கொடுத்தார்!

பத்மா, பதட்டத்துடன் எழுந்து தன் அறைக்குள் ஓடினாள். அலமாரியைத் திறந்ததும் அதில் கைப் பெட்டி இல்லாமற் போகவே, அவள் நிலைக் குத்தல் இட்டவள் போல் கீழே சாய்ந்தாள்.

(தொடரும்)



படிக்கப் பார்!

மதுபானம் ஒழிக

[ஆசிரியர்: கே. ஆர். கல்யாணராமய்யர்: பிரசுரம்: இளமணி பதிப்பகம், மவுண்ட் ரோடு, சென்னை; விலை: அணா 3.]

முதலாவது உலக மகா யுத்தத்தின்போது லாயிட் ஜார்ஜ் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்தார். யுத்தம் ஆரம்பமான சமயத்திலே அவர் பிரிட்டிஷ் மக்களுக்குச் செய்த ஒரு பிரசங்கத்தில், "நாம் மூன்று விரோதிகளை எதிர்த்து யுத்தம் செய்கிறோம். முதல் எதிரி ஜெர்மனி, இரண்டாவது எதிரி ஆஸ்திரியா, மூன்றாவது எதிரி மதுபானம். இந்த மூன்றிலும் மதுபானமே நமக்குப் பெரிய பகைவன்" என்று சொன்னாராம்.

மேல்நாடுகளிலே குடிப்பது என்பது சர்வ சாதாரணமான விஷயம்—காப்பி, டீ சாப்பிடுவதைப் போல! அந்நாட்டில் பிறந்த லாயிட் ஜார்ஜே மதுபானத்தைக் கண்டித்து இவ்வளவு அழுத்தந் திருத்தமாகச் சொல்லியிருப்பது ரொம்பவும் அதிசயமான விஷயம்.

லாயிட் ஜார்ஜ் மேற்படி விஷயத்தைச் சொல்லி ஏறக்குறைய கால் நூற்றாண்டு கழிந்து விட்டது. லாயிட் ஜார்ஜும் இறந்து விட்டார். அவர் சொன்ன விஷயம் இப்போது உலகத்தில் யாருக்காவது ஞாபகம் இருக்கிறதோ என்னவோ, நமக்குத் தெரியாது. ஆனால், நம்முடைய ராணிப்பேட்டை ஸ்ரீ கல்யாணராமய்யர் அதை இன்னும் அப்படியே ஞாபகத்தில் வைத்திருக்கிறார். ஞாபகத்தில் வைத்திருப்பது மல்லாமல், தாம் எழுதிய "மதுபானம் ஒழிக" என்னும் நூலில் இதைக் குறிப்பிட்டு மிருக்கிறார்.

முப்பத்தொரு பக்கங்கள் கொண்ட இந்தச் சிறு நூலில், மதுபானத்தை ஏன் ஒழிக்க வேண்டும் என்பதற்கு ஆதாரமாக காந்திஜியின் கருத்துக்களையும் ராஜாஜியின் மணி மொழிகளையும் இந் நூலாசிரியர் எடுத்துக் காட்டி யிருக்கிறார். பொய்யாமொழிப் புலவர் உள்பட வேறு பல உலகப் பெரியார்களின் அருமையான உயரிய கருத்துக்களையும் சேகரித்துக் கொடுத்திருக்கிறார்.

எட்டு ஜில்லாக்களில் மதுவிலக்கு அமுலுக்கு வந்திருக்கும் இந்தச் சமயத்தில், மதுவிலக்குப் பிரசாரம் செய்ய விரும்புபவர்களுக்கு இந்நூல் வெகு உதவியாக இருக்கும்.

கி. பி. 2000

[ஆசிரியர்: மு. வரதராசன்; பிரசுரம்: தமிழர் பதிப்பகம், 81, லிங்க செட்டித் தெரு, சென்னை; விலை: ரூ. 1-12-0.]

நாளை என்ன நடக்கும் என்பதும் நமக்குத் தெரியாது; நாளைநின்று என்ன நடக்கும் என்பதும் நமக்குத் தெரியாது. ஆனால், தீர்க்க தரிசனம் மிகுந்த புகழ் பெற்ற எழுத்தாளர்கள் நாளை நடக்கும் விஷயத்தை மாத்திரம் அல்ல, இன்னும் ஐம்பது-நூறு வருஷங்களுக்கப்பால் உலகத்தில் என்ன நடக்கும் என்பதைக் கூட ரொம்பத் தெளிவாகச் சொல்லி விடுகிறார்கள். ஹெச். ஜி. வெல்ஸ், பெர்னார்ட்ஷா போன்ற மேதாவிகள் வருங்கால உலகத்தைப் பற்றிய பல அற்புதமான சிந்தனைக் கதைகளையும் நாடகங்களையும் எழுதியிருக்கிறார்கள். மேற்படி முறையைத் தழுவி ஆசிரியர் வரதராசன் இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறார். இன்னும் ஐம்பது வருஷங் கழிந்து அதாவது கி. பி. 2000-ல் தமிழ்நாடு எப்படியிருக்கும்—எப்படியிருக்க வேண்டும் என்பதைப் பற்றித் தமது கருத்துக்களைச் சுவையுடன் எழுதியிருக்கிறார். தமிழர்கள் அவசியம் படிக்க வேண்டிய அருமையான புத்தகம்.

வான வில்

[ஆசிரியர்: அரு. ராமநாதன்; பிரசுரம்: செந்தமிழ் நிலையம், இராயவரம், புதுக்கோட்டை; விலை: ரூ. 3—0—0.]

ஒரு தமிழாசிரியரின் வறுமை தோய்ந்த வாழ்க்கையில் எத்தனையோ கஷ்டங்கள் குறுக்கிடுகின்றன. வயது வந்த, அழகிய, விவாகமாகாத அவரது பெண், அவள் காதலுக்குப் பாத்திரமான அத்தான் செல்லத்துரை. அவனையே விரும்பி ஏமாந்த மிஸ்டர் வேதாந்தம், மிஸ்டர் வேதாந்தத்தைக் காதலிக்காத அவன் அத்தை மகள், தமிழய்யாவின் மனைவி இத்தனை பேருமாகச் சேர்ந்து இந் நாடகத்தில் சோகத்தையும் வயிற்றெரிச்சலையும் கிளப்பி யிருக்கின்றனர். தற்கொலை, அதன் மூலம் தியாகம், காதல் மணம், கலப்பு விவாகம் முதலிய விஷயங்களும் இடம் பெற்றிருக்கின்றன. "உள்ளத்தைத் தொடும் உணர்ச்சி வாய்ந்த கட்டங்களுடன், வாழ்க்கையைத் தத்ரூபமாய்ச் சித்திரிக்கும் நாடகம்" என்று பிரசுரகர்த்தர்களே கூறும் போது நாம் கூறுவதற்கு வேறு என்ன இருக்கிறது?

பண்டிகைப் பரிசு

[ஆசிரியர்: வி. ஜி. ஸ்ரீநிவாசன்; பிரசுரம்: ஓம்கார நூலகம், புதுக்கோட்டை; விலை: ரூ. 1—8—0.]

கதைச் சுவையோடு நகைச் சுவையும் கலந்திருக்கும் பத்துக் கதைகள் இந்தப் புத்தகத்தில் அடங்கி யிருக்கின்றன. நாலு மொழிகளில் புலமையுள்ள ஸ்ரீ வி. ஜி. ஸ்ரீநிவாசனின் அழகான தமிழ்நடையை, 'ஹிந்துஸ்தானியால் தமிழுக்கு ஆபத்து வந்து விடும்!' என்று சொல்லும் ஒவ்வொருவரும் அவசியம் படித்துப் பார்க்க வேண்டும்.

பாரத் கணித பஞ்சாங்கம்

[ஆசிரியர்கள்: புரொபஸர் எல். வி. என். மணி B. A. (Hons), ஜோதிஷ பானு பண்டிட் இ. எஸ். கே. ஸ்வாமி; பிரசுர கர்த்தர்கள், மாடல் பப்ளிகேஷன்ஸ், 50, பத்தரையன் தெரு, ஜி. டி. சென்னை; விலை: அணா 6.]

பிரபல ஜோதிடர்கள் இருவர் கணித்த இந்த சர்வஜித் வருஷத்துப் பஞ்சாங்கம், காலத்துக்கேற்ற கோலம் பூண்டு விளங்குகிறது. அதாவது அட்டையில் அழகிய சுதந்திரக் கொடி பிடித்த பாரத மாதாவின் திருவுருவப் படத்துடன் திகழ்கிறது. நம்மில் சிலருக்குத் திதி, யோகம், நட்சத்திரம் ஆகியவற்றில் நம்பிக்கை யில்லாம லிருக்கலாம். ஆனால் தேதி, கிழமை, பண்டிகை இவற்றில் நம்பிக்கை யில்லாதவர்கள் இல்லை. எனவே நம் எல்லாருக்கும் இந்த ஸர்வஜித் பஞ்சாங்கம் ஸர்வ உபயோகமானது.

வாக்குறுதி

ஸோமாஸ்

அருணாசலப் பத்தரின் அருமை மகள் வள்ளியம்மை. நம்பிராஜன் மகள் வள்ளியம்மையைப் போல் தினைப்புனம் காத்து ஆலோலம் பாடாவிட்டாலும், இந்த வள்ளியம்மை வீட்டிலே சதா காலமும் அற்புதமாகப் பாடிக் கொண்டிருப்பாள். அவள் முகத்தில் ஒரு குறு குறுப்பும் கவர்ச்சியும் இருந்துகொண்டு எத்தனையோ இளைஞர்களை என்னென்னவோ பாடு படுத்தி விட்டன.

அருணாசலப் பத்தருக்குத் தம் அருமை மகளுக்கு வரன் தேடவேண்டிய அவசியமே இருக்கவில்லை. அந்தக் கவலையை நீக்கி வைத்தவன் கந்தசாமிதான். சின்னஞ் சிறு வயதிலிருந்தே வள்ளி எதிர் வீட்டுக் கந்தசாமியோடு கைகோத்துக் கொண்டு விளையாடுவதைக் கண்டு அருணாசலப் பத்தர் மனம் பூரித்துப் போவார். அவருடைய நண்பர் நாகலிங்கப் பத்தரின் ஏகபுத்திரன் தான் கந்தசாமி. ஆகையினால் அந்த இடத்துச் சம்பந்தம் அருணாசலப் பத்தருக்கு மிகவும் பிடித்திருந்ததில் அதிசயம் ஒன்றும் இல்லை.

‘கந்தனும் வள்ளியும் போல இவர்களிருவரும் சேர்ந்து வாழவேண்டும்’ என்று நினைத்து முருகப் பெருமானைப் பிரார்த்திக்கும்போது அருணாசலப் பத்தரின் கண்களில் நீர் நிறைந்துவிடும்.

நாகலிங்கப் பத்தரும், கந்தசாமிக்கும் வள்ளியம்மைக்கும் முடிபோட்டு விடவேண்டும் என்பதில் தீவிரமாய்த்தான் இருந்தார்.

வள்ளியம்மை குழந்தைப் பருவம் தாண்டிக் கன்னிப் பருவத்தை யடைந்து விட்டாள். கந்தசாமியும் வாலிபப் பருவத்தை யடைந்தான். அவர்களிடையே வளர்ந்துவந்த அன்பும் குழந்தைப் பருவத்திலிருந்து முதிர்வடைந்து காதலாகப் பரிணமித்தது.

இத்தனை நாட்களாகச் சதா சர்வ காலமும் கந்தசாமியுடனேயே காட்சி யளித்த வள்ளியம்மை இப்போதெல்லாம் வீட்டை விட்டு வெளியே வருவதே அபூர்வமா யிருந்தது. அப்படியே வந்தாலும் கந்தசாமியினால் அவளை நன்றாய்ப் பார்க்கக்கூட முடிவதில்லை. அவள் முகந்தான் நாணத்தினால் கவிழ்ந்து விடுகிறதே!

இந்த இன்ப நாடகம் இப்படியே நடந்து கொண்டிருக்கவில்லை. நாகலிங்கப் பத்தர் திடீரென்று நோய் வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாகி விட்டார். கந்தசாமி அவரை எவ்வளவோ அக்கறையோடுதான் கவனித்தான். ஆனாலும் நாகலிங்கப் பத்தர் தம் அருமை மகன் கந்தசாமியைத் தன்னந் தனியே விட்டு விட்டு விண்ணுலகம் போய் விட்டார். அதற்குப் பிறகு குடும்பத்தில் கஷ்டத்துக்கு மேல் கஷ்டமாக வந்து, கந்தசாமி அவன் தகப்பனார் வைத்து விட்டுப் போன ஒரே வீட்டையும் விற்றுப் பிழைக்கும்படியான காலம் வந்து விட்டது.

கந்தசாமி தனியாகக் கஷ்டப்பட்டுப் பிழைக்கும்படியாக அருணாசலப் பத்தர் அவனை விட்டுவிடவில்லை. அவனைத் தம்முடைய பட்டறையிலேயே வேலைக்கு வைத்துக் கொண்டு அவனுக்கு மாதச் சம்பளம் கொடுத்து வந்தார். ஆனால் கந்தசாமிக்கு இது அவ்வளவு திருப்தியைத் தரவில்லை. அதற்காக அவன் வேலையை விட்டுவிடவும் தயாராயில்லை.

இதன் காரணமாக, முன்பெல்லாம் இருந்தமாதிரி இப்பொழுது அவன் கேலியும் பரிகாசமுமாக இருப்பதில்லை. எப்படி இருக்க முடியும்?

★

அன்றையதினம் அந்த விபரீதச் சம்பவம் நேர்ந்து விடும் என்று கந்தசாமியோ வள்ளியோ எதிர்பார்க்கவில்லை. இல்லாவிட்டால் அத்தனை நாளும் கடைக்கண்ணோக்கிலேயே கந்தசாமியிடம் பேசி வந்த வள்ளியம்மை அன்று அவனை நெருங்கி நேரில் பேசியிருக்க மாட்டாள். கந்தசாமியும் அவளை அவ்வளவு தூரம் அனுமதித்திருக்க மாட்டான்.

"வள்ளி, என்னை மறந்துவிடு. நான் உன் அப்பாவிடம் கூலிபெறும் வேலைக்காரனாகி விட்டேன். இனி உன்னை எனக்குக் கொடுக்க உன் தகப்பனார் ஒரு போதும் சம்மதிக்க மாட்டார்!" என்று கண்களில் நீர் பெருகக் கூறினான் கந்தசாமி.

இவ்வாறு அவன் கூறியதும் வள்ளிக்குத் துக்கம் தாங்கவில்லை. அவனுடைய கைகளைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு, "உங்களை மறப்பதா? அது முடியவே முடியாது!" என்றாள்.

இந்தச் சமயத்தில், "அயோக்கியப் பயலே! வளர்த்த கடா மார்பில் பாய்வது போல் எப்படிப்பட்ட துரோகம் செய்யப் பார்க்கிறாய்? உம்...சட, இந்த க்ஷணமே!" என்று அருணாசலப் பத்தர் உச்சஸ்தாயியில் கத்திக் கொண்டே அங்கே தோன்றியதும், வள்ளியம்மையும் கந்தசாமியும் செயலிழந்து விட்டனர்.

"இல்லை....மா....மா!...." என்று ஆரம்பித்தான் கந்தசாமி.

"பேசாதே! ஓடு வெளியே!" என்று உறுமினார் அருணாசல பத்தர்.



அவ்வளவுதான். கந்தசாமி அதற்குமேல் அங்கே நிற்கவில்லை. அவன் கால்கள் தாமாகவே அங்கிருந்து நகர்ந்தன.

அப்பப்பா! கந்தசாமி வாசலைத் தாண்டும் போது வள்ளியம்மை அவனைப் பார்த்த பார்வை விவரிக்க முடியாத சோக அலைகளை அவனுடைய நெஞ்சில் நிரப்பி விட்டது.

★

இது நடந்து பல வருடங்கள் ஆகி விட்டன. இப்போது கந்தசாமி தன் இனத்தவரின் உதவியினால் சொந்தமாகவே ஒரு சிறு பட்டறை வைத்துக் கொண்டு வேலை செய்து வந்தான். சொற்ப சம்பாத்தியந்தான். ஆனாலும் சுதந்திரம் பறி போகவில்லை யல்லவா?

அன்று கந்தசாமி பட்டறையில் வேலை செய்து கொண்டிருந்தபோது அவன் மனப் பட்டறையிலும் ஓயாமல் வேலை நடந்து கொண்டிருந்தது. அந்தச் சமாசாரத்தைக் கேட்டதிலிருந்து அவனுக்கு வேலையே ஓடவில்லை. அது அப்படி யொன்றும் புதியதல்ல; அவன் ஏற்கெனவே எதிர்பார்த்தது தான். வள்ளியம்மைக்கு விவாகம்!

கதைகளில் வரும் கதாநாயகர்களைப் போல் — கந்தசாமிக்கும் வள்ளியம்மையின் மேல்தான் முதலில் கோபம் கோபமாக வந்தது. "அவளுக்கு எப்படித்தான் வேறொருவனை மணக்க மனம் இடந்தந்ததோ!" என்று எண்ணி அவன் ஆத்திரமடைந்தான்.

இந்தச் சமயத்தில், "கந்தசாமி, இந்தத் திருமாங்கல்யத்தைச் சீக்கிரம் செய்து முடிக்க வேண்டும். காலை முகூர்த்தத்தில் மாங்கல்யதாரணம் நடத்துவது உன் கையில்தான் இருக்கிறது. கூலியைப் பற்றி யோசிக்காதே; கூடவே தருகிறேன். தயவு செய்து காலை ஏழு மணிக்குத் திருமாங்கல்யத்தை ராமசாமி நாயுடு சத்திரத்தில் கொண்டு வந்து கொடுத்து விடு!" என்று கூறிச் சென்றார் ஓர் அவசரக்கார ஆசாமி.

கந்தசாமி அந்த அவசர வேலையைத் தட்டிக் கழித்திருப்பான். ஆனால் அந்த ஆசாமி அவன் பதிலை எதிர்பாராமலே பவுனைக் கொடுத்துவிட்டுப் போய் விட்டார்,

ஏனெனில், கந்தசாமியிடம் வேலை செய்வதற்கு வேண்டிய உற்சாகமோ பரபரப்போ கொஞ்சங்கூட அப்போது இல்லை. மேலும் திருமாங்கல்யத்தைப் பற்றிய பேச்சை யெடுத்தாலே, அவனுக்கு வள்ளியம்மையும்



தானும் கழித்த இன்ப நாட்களின் நினைவுகள் வந்து அவன் மனதில் துன்பச் சாயைகளை விரிக்கும்.

"அசடு மாதிரி என்னைச் சுற்றிச் சுற்றி வருகிறாயே, நாளைக்கு என்னை வேறு யாருக்காவது கல்யாணம் செய்து கொடுப்பது என்று பெரியவர்கள் தீர்மானம் செய்து விட்டால், நீ அதைத் தைரியமாக எதிர்த்து நின்று என்னைக் கல்யாணம் செய்து கொள்ளுவாயா?" என்று ஏளனமாகக் கேட்பாள் வள்ளியம்மை.

கந்தசாமி கடகட வென்று சிரித்து விட்டு, "வள்ளி, நான் இருக்கும் போது யார் உன்னைத் தொட்டுத் தாலி கட்டிவிட முடியும்? என் கையினாலேயே செய்த திருமாங்கல்யத்தை உன் கழுத்திலே நான் கட்டுவேன். அந்த நாள் தூரத்திலில்லை!" என்று எத்தனையோ தடவை வள்ளியம்மையிடம் சொல்லியிருக்கிறான்.

இதெல்லாம் அன்று; இன்றோ வழக்கம்போல் இந்தக் கல்யாண வேளையிலேயும் கந்தசாமி எத்தனையோ திருமாங்கல்யங்களைச் செய்து விட்டான். ஆனால் தன்னையும் வள்ளியம்மையையும் வாழ்க்கைப் பாதையில் பிணைக்கக் கூடிய திருமாங்கல்யத்தை மாத்திரம் அவளுக்கு வாக்குக் கொடுத்தபடி அவன் இதுவரை செய்யமுடியவில்லை!

★

மறுநாள் பொழுது விடிந்ததும் அந்தத் திருமாங்கல்யத்தை எடுத்துக் கொண்டு கல்யாண வீட்டுக்குப் போனான் கந்தசாமி. அங்கே ஒரே ரகளையாயிருந்தது. தான் நேரம் கழித்துப் போனதில் முகூர்த்த வேளை தவறி விட்டதோ, அது காரணமாகத்தான் இந்த ரகளையோ என்று நினைத்து அவன் திடுக்கிட்டான்.

அந்தச் சமயத்தில் அவன் கண்ட இன்னொரு காட்சி அவனை உலுக்கி விட்டது. காரணம், புது மணப் பெண்ணாக நின்றவள் வள்ளியம்மையாக இருந்ததுதான்! அந்த வீட்டு மாப்பிள்ளையாயிருக்க வேண்டிய அவன், திருமாங்கல்யம் செய்து, அதையெடுத்துக் கொண்டு கூலி கேட்க வந்திருக்கிறானே!

இவ்வாறு எண்ணி அவன் வேதனைப் பட்டுக் கொண்டிருக்கும் போதே மாப்பிள்ளை வீட்டாருக்கும் பெண் வீட்டாருக்கும் இடையே, ஏதோ நகை செய்து போடாததால் ஏற்பட்ட ரகளை அதிகமாகி, கடைசியில் கல்யாணமே நின்று போயிற்று. சம்பந்தி வீட்டார் கோபத்தோடு வெளியேறி விட்டனர்.


அருணாசலப் பத்தருக்கு ஆத்திரமும் அவமானமுமாக இருந்தது. அதே முகூர்த்தத்தில் வள்ளியம்மையை வேறு யாருக்காவது விவாகம் செய்து கொடுத்துவிட வேண்டும் என்று அவர் மனம் துடித்தது. அந்தச் சமயம் கந்தசாமி திருமாங்கல்யமும் கையுமாக அங்கே காட்சியளித்தது எல்லோருக்கும் அதிசயத்தை யளித்தது.

"அப்பா, கந்தசாமி, வா! நீதான் வள்ளியம்மையைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டியவன். நான் பணத்துக்கு ஆசைப்பட்டு உன்னை மறந்துவிட்டேன். நீ எப்படிச் சமயத்துக்குத் திருமாங்கல்யத்துடன் வந்து சேர்ந்தாய்?" என்று ஆனந்தத்தினால் நாக் குழறக் கேட்டார் அருணாசலப் பத்தர்.

சம்பந்தி வீட்டிலிருந்து ஒருவர் தன்னிடம் திருமாங்கல்யத்துக்கு ஆர்டர் கொடுத்த சமாசாரத்தைக் கந்தசாமி உற்சாகத்துடன் சொன்னான்.

"எப்படியோ பதினைந்து வருஷங்களுக்கு முன்பு உன் தகப்பனுக்குக் கொடுத்த வாக்குறுதியை இன்று தெய்வ கதியாக நிறைவேற்றி வைக்கச் சந்தர்ப்பம் நேர்ந்தது!" என்றார் அருணாசலப் பத்தர்.

"நானுந்தான் வள்ளியம்மைக்கு அன்று கொடுத்த வாக்குறுதிப்படி திருமாங்கல்யத்தைச் செய்து எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன்!" என்று கந்தசாமி கூறியதும், வள்ளியம்மை நாணித் தலை குனிந்தாள்!


இந்தியாவிலுள்ள மற்ற எல்லோரையும் போல வேயே சீக்கியர்களிடையேயும் தேனீர் அருந்துவ தென்பது நெடுங் காலப் பழக்கம்.
வீட்டிலுள்ளவர்கட்கோ விருந்தினர்களுக்கோ அளிப்பதற் காக வேண்டி புதுமையும் மணமும் நிறைந்ததும் எல்லோரும் மிக விரும்புவதுமான ப்ருக் பாண்ட் தேயிலை ஒவ்வொரு சீக்கிய கிரஹத்திலும் எப்போதும் காணலாம்.
ப்ருக் பாண்ட்
இரு இலையும் ஒரு மொட்டும்

வான சஞ்சாரம்

இசைத்தேனி

ஏப்ரல் 15உ. திருச்சியில் வேணுகானக் கச்சேரி செய்த டி. என். ஸ்வாமிநாத பிள்ளை அவ்வாத்யத்தில் கைதேர்ந்த வித்வான். கலையுலகின் நன்மதிப்பைப் பெற்றவர். அன்றையக் கச்சேரியில் பேகடா, ஸ்ரீரஞ்சனி ராகங்களோடு நயம்வனிதேநாதினி என்ற அபூர்வ ராகத்தையும் நல் வடிவமாய்ச் சித்திரித்தது பாராட்டத்தக்கது. பல்லவி ராகமாம் காம்போதியில் அவரது கலைச் சிறப்பு நன்கு விளங்கியது. மிருதங்க வித்வான் சக்திவேல் அவர்களின் வாசிப்பு கச்சிதமாய் அமைந்து கச்சேரியைச் சிறப்பித்தது.

16உ. சென்னையில் கமலா அனந்தகிருஷ்ணனின் கானம் இனிமையாயிருந்தது. ஷண்முகப்ரியா, கேதாரகௌளை ராகங்களையும் உருப்படிகளையும் திறம்படக் கையாண்டார்.

17உ. திருச்சியில் முழு நேரக் கச்சேரி செய்த சிதம்பரம் ஜயராமன் பிள்ளை ரஞ்சக சாரீரம் படைத்தவர். மாயாமாளவகௌளை, சாவேரி, பேகடா ராகங்கள் தவிர பல்லவிக்கு ஹனுமதோடியை எடுத்துக் கொண்டு அமைத்தார்.

அன்று சென்னையில் வைக்கம் ஸரஸ்வதி ஜீவன் நிறைந்த குரலில் காம்போதி, ஷண்முகப்ரியா, நாட்டக்குறிஞ்சி ராகங்களைப் பாடிக் களைகட்ட வைத்தார்.

18உ. திருச்சியிலிருந்து திருவீழிமிழலை கோவிந்தராஜ பிள்ளை சகோதரர்களின் நாதஸ்வரம் அனாயாச உருட்டல் புரட்டல்களுடன் காதை நிரப்பியது. ஹரிகாம்போதி கப பந்துவராளி ராகங்கள் சுகமாயிருந்தன.

கோட்டு வாத்யத்தைத் திறம்படக் கையாளுபவர்களில் மன்னார்குடி கே. சாவித்ரி அம்மாளுக்கு ஒரு முக்யஸ்தானமுண்டு. 20உ. திருச்சியில் நடந்த அவரது கச்சேரியில் ராகம் உருப்படிகளை நிதானமாயும் அழுத்தமாயும் கையாண்டார். ஆனந்தபைரவி, பேகடா, மணிரங்கு ராகங்கள் வனப்பாயிருந்தன.

ஏப்ரல் 22உ. முதலான ஒரு வார ரேடியோ நிகழ்ச்சிகளில் அபூர்வ உயர்தரம் கொண்டு திருச்சியில் அமைந்த இரண்டு கச்சேரிகள் ரஸிகர்களின் மனதைக் கவர்ந்திருக்கும். ஒன்று 2 உ. கேட்ட முடிகொண்டான் வேங்கடராமய்யரது. அன்று அவரது சாரீரம் வெகு சௌகர்யமாய் வாய்த்தது என்றாலே போதும். கச்சேரியின் சிறப்பைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. முதிர்ந்த ஞானம், அபார சாதகம், கற்பனைப் பெருக்குடன் பல உயரிய கைதுணைப் பொருத்தங்கள் — இவையெல்லாம் சேர்ந்து தம் கலையை அபூர்வ ரகமாய் வைத்துக் கொண்டிருக்கும் வித்வான். அவர் வழங்கிய பேகடா, சக்ரவாகம், சாமா ராகங்களும், பாவம் நிறைந்து உருக்கமாய் வெளிவந்த ஜாவளியும், 'நீரதமு' கிருதியின் நிரவல் ஸ்வரப்ரஸ்தாரங்களும் மேற்கூறிய அவரது கலைச் சிறப்பை நன்கு நிரூபித்தன.

இரண்டாவது கச்சேரி 25உ. நடந்த திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளையது என்றாலே போதும். அன்று குறிப்பிட்டிருந்த திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளைக்குப் பதிலாக நாதஸ்வர கானம் பொழிந்தார். தம்பூரா சுருதியோடு, வயலின், மிருதங்கம் இவைகளையே பக்க வாத்யமாகக் கொண்டது மற்றொரு விசேஷம். பந்துவராளியுடன் எடுத்தவுடனேயே கேட்போரை இன்னிசையில் ஆழ்த்தினார். கல்யாணியை அழகு வடிவமாய்ச் சித்தரித்தார். அடுத்தாற் போல் பல்லவிக்காக மற்றொரு பிரதிமத்யம ராகமாம் பவப்ரியாவை எடுத்தவுடன் அது உசிதமா என்று சற்று சந்தேகித்தேன். ஆனால் சாதாரண வழக்கத்திலிருந்து மேதைகளுக்கு விதிவிலக்குகள் உண்டு என்பதை நிரூபிப்பது போல் அந்த அசாதாரண ராகத்தைத் தெளிவாயும், சாங்கோபாங்கமாயும் அமைத்தார். அதில் விழுந்த வக்ரப் பிடிகளில்கூட அநாயாசமாய் இழைந்த நாஸாக்களும், எழில் நிறைந்த பிரத்யேக ஜாரு கமகப் பிடிகளும் அவரது மேதையை விளக்கின. பல்லவியைத் தொடர்ந்து வாசித்த ராகமாலிகை மாணிக்கக்கோவையாக இலங்கியது.

• • •

23உ. திருச்சியில் இருவர் சேர்ந்து பாடியதோர் கானம் உற்சாகமாயிருந்தது. ஸிம்மேந்திர மத்யமம், மோஹனம் ராகங்களும் உருப்படிகளில் மாறி மாறி ஸ்வரப்ரஸ்தாரங்களை வழங்கியதும் குறிப்பிடத்தக்கவை. பாடியவர்கள் பி. வி. கணேசய்யர், ராமய்யர்.

அன்று சென்னையில் எம். என். செல்வம் பிள்ளை அய்யங்கார் சங்கராபரணத்தை ராகம், தானம், பல்லவிக்காக எடுத்துக் கொண்டு ரஸமாய்ப் பாடினார்.

24உ. சென்னையில் டி. வி. வஸந்தா இனிய குரலில் நல்ல தேர்ச்சியுடன் கல்யாணி, ஸஹானா ராகங்களையும் உருப்படிகளையும் திறம்படக் கையாண்டார்.

25உ. சென்னையில் பாடிய ஆர். ரங்கநாயகியின் தன்யாசி, சங்கராபரண ராகங்கள் நன்கு அமைந்தன.

26உ. சென்னையிலிருந்து கேட்ட எம். கணேசனின் கானம் குறிப்பிடத்தக்கது. தோடி ராகமும், ஸ்ரீ வெங்கடேச கிருதியும் தரமாயிருந்தன.

அன்று அதே நிலையத்தில் பாடிய பிருந்தா, முக்தா இவர்களின் இரு குரலிசையில் உருப்படிகள் வெள்ளமாய் வன்மையாய் இழைந்திலங்கின. ஒன்றேகால் மணி நேரக் கச்சேரியில் கரஹரப்ரியா ராகம் ஒன்றோடு ஆலாபனையை மட்டுப்படுத்தாமல், இன்னும் ஒன்றிரண்டு ராகங்களையும் வழங்கியிருக்கலாம்.

28உ. சென்னையில் நடந்த மாயவரம் வி. சரஸ்வதியின் கானம் சுகமாயிருந்தது. தோடி ராகமும் உருப்படிகளின் ஸ்வரப்ரஸ்தாரங்களும் கவனத்தையிழுத்தன.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI மே 11, 1947 4 அணா

REGD. NO. M. 4392

